# சோதனைகளில் உறுதியாய் நிற்கும்படிக்கான ஒரு வேண்டுகோள் (2 தீமோத்தேயு 1)

*"ஆகையால் நம்முடைய கர்த்தரைப் பற்றிய சாட்சியைக் குறித்தாவது, அவர் நிமித்தம் கட்டப்பட்டிருக்கிற என்னைக் குறித்தாவது, நீ வெட்கப்படாமல், தேவ வல்லமைக்கேற்றபடி சுவிசேஷத்திற்காக என்னோடேகூடத் தீங்கநுபவி" (2 தீமோ. 1:8).*

உறுதியாய் நிற்குதல்! பவுல் கிறிஸ்துவைப் பின்பற்றுபவர் என்பதற்காகச் சிறையில் அடைக்கப்பட்டு, மரணத்தை எதிர்கொண்டிருந்த வேளையில், ஒரு கிறிஸ்தவருக்கு அவர் துன்புறுத்தப்படுதலின் போது தனது விசுவாசத்தில் உறுதியாய் நிற்குதல் சாத்தியமாகவே உள்ளது என்று எழுதினார். 2 தீமோத்தேயு நிருபத்தில் அவர் சுவிசேஷத்தின் பிரசங்கியார் என்ற வகையில் தனது சொந்த பாடுகள் பற்றியும், தீமோத்தேயு பாடு அநுபவிக்கக் கூடிய சாத்தியக்கூறுகள் (1:8; 2:3; 3:12) பற்றியும் பேசுகையில், விசேஷமாய் அவர் ரோமாபுரிக்கு வந்த பொழுது (4:9, 21) உணர்வெழுச்சி நிறைந்தவராயிருந்தார்.

அதிகாரம் 1ல் பவுல், தீமோத்தேயுவின் எதிர்காலங்களில் அவரது தெரிந்து கொள்ளுதல்களைப் பற்றி அறைகூவல் விடுக்கப்போகும் எதிராளிகளைக் குறித்துக் கவலையைக் காண்பித்தார். தீமோத்தேயு, தமது பாட்டி மற்றும் தாயின் மூலம் தனக்கு அளிக்கப்பட்ட விசுவாசத்தை (1:5) பராமரிக்காமல் இருந்தால், பவுலின் மூலம் தனக்கு அளிக்கப்பட்ட வரத்தைச் (1:6) செயல்படுத்தாமல் இருந்தால், மற்றும் பவுலினாலும் கிறிஸ்துவினாலும் தனக்கு அளிக்கப்பட்ட ஆரோக்கியமான வசனத்தைப் (1:13) பற்றிக் கொள்ளாமல் இருந்தால், பின்பு அவரது சோதனைகள் அவரை கோழைத்தனத்திற்கு வழிநடத்தி (1:7), அவர் சுவிசேஷம் மற்றும் பவுலின் நிமித்தம் வெட்கப்படக் காரணமாகி (1:8), மற்றவர்கள் செய்திருந்தது போலவே அவரும் பவுலைக் கைவிடுவதற்கு வழிநடத்தியிருக்கும்.

இந்தச் சாத்தியக் கூற்றினை எதிர்கொண்டு வெல்வதற்கு, தீமோத்தேயு

உறுதியுடன் நிற்க வேண்டும் என்று பவுல் அவருக்கு வேண்டுகோள் விடுத்தார். அவர் தம் வேண்டுகோளை, தெய்வீக அதிகாரத்தினால் தாம் அப்போஸ்தலராக்கப்பட்ட தமது சொந்த நியமனம் (1:1, 2), பவுல் மற்றும் தீமோத்தேயு ஆகியோரின் சொந்த அனுபவங்கள் (1:3-7), தமது சொந்த சாட்சியம் மற்றும் கட்டளை (1:8-14), மற்றும் விசுவாசமற்ற பலருடைய, விசுவாசம் நிறைந்த ஒருவருடைய (1:1-18) முன்மாதிரிகள் ஆகியவற்றின் அடிப்படையில் விடுத்தார்.

## பாடம் 1: உறுதியாய் நிற்கும்படிக்கான தெய்வீக தூண்டுதல் (1:1, 2)

பவுல், சுவிசேஷ ஊழியர் ஒருவர் உறுதியாய் நிற்பவராய் இருத்தலுக்கான தூண்டுதல்கள் சிலவற்றுடன் 2 தீமோத்தேயு நிருபத்தைத் தொடங்கினார்.

### தேவனுடைய திட்டம்

உறுதியாய் நிற்குதலுக்கான பவுலின் வேண்டுகோள், அது தேவனுடைய திட்டமாய் இருப்பதன் அடிப்படையில் அமையப் பெற்றிருந்தது. பவுல், "கிறிஸ்து இயேசுவினால் உண்டாயிருக்கிற ஜீவனைப் பற்றிய வாக்குத்தத்தத்தின்படி, தேவனுடைய சித்தத்தினால், இயேசு கிறிஸ்துவின் அப்போஸ்தலனாயிருக்கிற[1] பவுல்" என்ற நிலையில் இருந்தார் (1:1). தேவன், பவுல் பிறக்கு முன்பே கூட அவருக்காகத் திட்டங்களைக் கொண்டிருந்தார் (கலா. 1:15, 16). பவுலுக்காகத் தேவன் தம் சிந்தையில் கொண்டிருந்த பணிகளுக்கு அவரை(பவுலை)த் தகுதிப்படுத்த அவர் பெறவிருந்த முந்திய மற்றும் பிந்திய பயிற்சிகள் யாவை என்று தேவன் அறிந்திருந்தார். பவுல் தமது நிருபங்களில் எழுதியபடி, நாம் தேவனுக்கு நம்மையே இணக்கப் படுத்தும் பொழுது மனித வாழ்வில் தேவனுடைய அருளிரக்கம் எவ்வாறு செயல்படுகிறது என்பதைப் புரிந்து கொண்டிருந்தார்.[2]

### தேவனுடைய வாக்குத்தத்தங்கள்

பவுலுக்கான தேவனுடைய திட்டங்கள் தேவனிடமிருந்து வந்த வாக்குத்தத்தங்களையும் உள்ளடக்கியிருந்தன. அவர் "கிறிஸ்து இயேசுவினால் உண்டாயிருக்கிற ஜீவனைப் பற்றிய வாக்குத்தத்தத்தின்படி" (1:1அ) அப்போஸ்தலராய் இருந்தார். ஜீவனைப் பற்றிய இந்த வாக்குத்தத்தமானது உறுதியாய் நிற்பதற்குத் தூண்ட வேண்டும், ஏனெனில் இது நீதியின் வாழ்வையும், "வாழ்வில் புதிய தன்மை" ஒன்றையும் (ரோமர் 5:18; 6:4; 2 கொரி. 5:17) அளிக்கிறது. இது நமது சரீரங்களில் வெளிப்படுத்தப்பட்டு, தேவபக்திக்கென்று ஊக்குவிப்பாய் இயக்கப்படுகிறது. கிறிஸ்துவின்மூலம்

நாம் இப்பொழுதுள்ள வாழ்விற்கும் இனி வர இருக்கும் வாழ்விற்கும் வாக்குத்தத்தம் பெற்றவர்களாய் நிறைவான வாழ்வை வாழ முடியும் (1 தீமோ. 4:8). தேவனுடைய திட்டத்திலும் நமது அடைவிடத்திலும் வாழ்வானது நித்தியமானதாக இருப்பதால் (தீத்து 1:1, 2; 3:4-7, விசேஷமாக வ. 7) நாம் உயிர்த்தெழுதலின் நம்பிக்கையையும் (யோவா. 5:29) மற்றும் அழியாமையின் நம்பிக்கையையும் (2 தீமோ. 1:10) பெற்றுள்ளோம். என்ன ஒரு வாழ்வு! பவுல் தம் வாழ்வு நலிவுறுவதாய் உணர்ந்த வேளையில், இந்த வாக்குத்தத்தமானது ஒவ்வொரு நாளும் பிரகாசமுள்ளதாக ஒளிர்ந்திருக்க வேண்டும்!

மரணத்திற்குப் பின்புள்ள வாழ்வுடன் தொடர்புடைய வாக்குத் தத்தங்களைக் கிறிஸ்தவர்கள் மற்ற மக்களைக் காட்டிலும் அதிகமாய்க் கொண்டுள்ளனர். பவுலின் “பிரியமான குமாரன்”[3] (1:2) என்ற வகையில் தீமோத்தேயுவுக்கு தேவன் மற்றும் கிறிஸ்துவின் மூலமாக இப்பொழுது சாத்தியப்படுகின்ற விலையேறப் பெற்ற வாக்குத்தத்தங்கள், உறுதியாய் நிற்பதற்கு இன்னுமொரு காரணமாக உள்ளன. தேவனுடைய வளமையான கிருபையும் நன்மையும் நமக்காக எவ்வாறு ஊற்றப்பட்டன என்பதைச் சிந்தித்துப் பாருங்கள் (அடுத்தவரும் அட்டவணையைக் காணவும்)

தேவனுடைய கட்டளை மற்றும் தேவனுடைய வாக்குத்தத்தம் (கடந்த கால, நிகழ் கால மற்றும் எதிர்காலத்திற்கானது) ஆகியவற்றின் காரணமாக, அந்த உறுதிப்பாட்டினை, ஒரு கட்டளையாகத் தீமோத்தேயு காண வேண்டும் என்று பவுல் விரும்பினார்.

கொடுக்கப்பட்டுள்ளது என்ன? பெறப்பட்டுள்ளது என்ன?

கிருபை ............................................ தைரியம்

(1தீமோ. 1:14; ரோமர் 5:15;
2 கொரி. 9:8-11; 2 தீமோ. 2:1)

இரக்கம் ............................................ திருத்திக் கொள்ளுதல்

(சங். 86:15; 145:8, 9; லூக். 1:78, 79;
எபே. 2:4-6; 1 தீமோ. 1:13)

சமாதானம் ............................................ ஆறுதல்

(2 தெச. 3:16; 1 பேது. 1:2;
பிலி. 4:4-7)

***யார் இதனைக் கொடுக்கிறார்?***

| | | |
|---|---|---|
| பிதாவாகிய தேவன் | நாம் பெற வேண்டும் என்று விரும்புபவை | நெருக்கம் & அக்கறை |
| (மத். 6:9; கலா. 4:6, 7) | | |
| நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து | நாம் பெற வேண்டும் என்று விரும்புபவை | தைரியம் சுத்திகரித்தல் பரிசுத்தமாக்கப்படுதல் |
| (அப். 2:36; யோவா. 1:40, 41; 16:23, 24; மத். 1:21; 1 யோவா. 4:14; வெளி. 1:5; லூக். 6:46; கொலோ. 3:17; அப். 17:24). | | |

## பாடம் 2: உறுதியாய் நிற்பதற்கான எடுத்துக்காட்டுகள் (1:3-7)

*பவுல் உறுதியாக நிற்குதல் பற்றிய தனிப்பட்ட பிணைப்புகள், குடும்பப் பற்று, மற்றும் உற்சாகமூட்டும் வரலாறு ஆகியவற்றின் கணக்கெடுப்பை/ ஆய்வை உள்ளடக்கினார். இது எழுதப்பட்ட வேளையில் பவுலின் இருதயம் நினைவுகளினால் மெய்சிலிர்த்தது! தீமோத்தேயு நிகழ்காலத்தில் உறுதியாய் நிலைத்து நிற்க வேண்டும் என்பதற்காக அறைகூவல் விடுப்பதற்குப் பவுல் கடந்த காலத்தை ஆய்வு செய்தார்!*

### நமக்கு முன் சென்றுள்ளவர்கள் யார் (வ. 3-5)

கர்த்தருக்காக பற்றுறுதியுடன் இருந்தவர்களின் வழி வழிப் பண்பிற்காகப் பவுல் நன்றி மிக்கவராக இருந்தார். அவர் தீமோத்தேயுவுக்கு (மற்றும் நமக்கும்) நமது ''முற்பிதாக்களின்'' விசுவாசத்தையும் அவர்களின் ஆவிக்குரிய ஊழியத்தையும் நினைவூட்டினார் (1:3; கலா. 1:14; பிலி. 3:4-6; அப். 24:14-16). பவுல் தம் "பிரிய குமாரனாகிய" தீமோத்தேயுவைப் பற்றிய தற்போதைய சிந்தனைக்காகவும் நன்றிமிக்கவராய் இருந்தார். அந்த நன்றிமிக்க உணர்வானது பவுலினால் குறைந்தபட்சம் ஐந்து பதில்செயல்களைத் தூண்டி இயக்கிற்று. முதலாவது, அது தொடர்ந்து நிலைக்கும் ஜெபத்திற்கு வழிநடத்திற்று: "... நான் இரவும் பகலும் இடைவிடாமல் என் ஜெபங்களில் உன்னை நினைத்து ..."[4]

இரண்டாவது, பவுல் தீமோத்தேயுவைக் காண "ஆசையாய்" இருந்தார் (1:4). அன்புக்குரிய ஒருவரிடத்தில் இருந்து பிரிதல் என்பது ஆவியை மூழ்கடிக்கக் கூடியதும் தனிப்பட்ட செயல்விளைவுத் திறனை அழிக்கக் கூடியதுமான தனிமையின் நொறுக்கும் வேதனையை அனுப்பக் கூடும். கிறிஸ்துவுக்கென்று பவுலின் ஒப்புக் கொடுத்தலும் கடமையும் இப்படிப் பட்ட எண்ணத் தூண்டுதல்களுக்கு மேலாக எழும்பி நின்றன, ஆனால் அவரது பெரிய இருதயமானது தமது அன்பார்ந்த நண்பர் மீதான விருப்பத்தை/ஏக்கத்தை நிச்சயமாக உணர்ந்திருந்தது.

மூன்றாவது, பவுல் தாம் "களிப்பினால் நிரப்பப்படக் கூடிய"[5] தருணம் ஒன்றை எதிர்நோக்கினார். பவுல் இந்த நிருபத்திற்காக மகிழ்வான எதிர் பார்ப்பு கொண்டிருந்தார். எதிர்பார்ப்பு என்பது சில ஆத்துமாக்களை பலம் வாய்ந்திருக்கும்படி - அந்த மகிழ்வான தருணம் ஒரு உண்மை நிலையாகும் வரையில் பற்றிக் கொண்டிருக்கவும் மற்றும் கடினமாக முயற்சி செய்யவும் - அடிக்கடி வழிநடத்தியுள்ளது.

நான்காவது மற்றும் எல்லாவற்றிலும் மனதைத் தொடக் கூடியது மானது, பவுல் தீமோத்தேயுவின் கண்ணீரை நினைவுகூர்ந்தார். கண்ணீர் இல்லாத ஒரு சுவிசேஷ ஊழியருக்கு, அவர் ஆத்துமாவில் வெறுமையோ அல்லது தமது ஊழியத்தில் சில கருத்தின்மைத் தன்மையோ இருக்க வேண்டும். கண்ணீர் என்பவை பவுலுக்கு வெகு சாதாரணமானவைகளாய்

இருந்தன (பிலி. 3:18; அப். 20:19, 31; 2 கொரி. 2:4), மற்றவர்களுக்கும் அவ்வாறே இருந்தன (யோவா. 11:35; எபி. 5:7). ரொனால்டு வார்டு என்பவர் பின்வருமாறு கூறினார்:

> புத்திக் கூர்மை அறிவுணர்வு பலமாய் வாய்க்கப்பட்டிருந்த பிரசங்கியார் ஒருவருக்கு உணர்வெழுச்சியின் வெதுவெதுப்பினால் அவ்வுணர்வு போதுமாக்கப்பட்ட பொழுது அவர் வல்லமை கூடியவராகின்றார். குளிர்ந்த புத்திக் கூர்மையானது திரளான மக்களை அசைப்பதில்லை; வெம்மை மிக்க பாடுகள் ஏதொன்றையும் எடுத்துக் கொள்ளும்படி கொடுப்பதில்லை; அக்கினியின் மீதான புத்திக் கூர்மையானது அவர்களுக்குப் போதிக்கின்றது, அவர்களை அசைக்கின்றது, தேவனுடைய சத்தியத்தை அவர்களுக்கு உணவாக ஊட்டுகின்றது. விரைவிலேயே தீமோத்தேயு தமக்குள் இருந்த தேவ வரத்தை அனல் மூட்டும்படி நினைவூட்டப்படவிருந்தார் (1:6). சுத்தமாகவே கிளர்ச்சியடையாத ஒன்று ஏதொன்றையும் அனல் மூட்ட முடியுமா? பிரசங்கித்தலில் உணர்வெழுச்சியின் இடத்திற்கான ஆழ்ந்த சிந்தனையிலிருந்து மிகவும் அப்பால் விலகி, தீமோத்தேயுவின் கண்ணீர் பற்றிய அப்போஸ்தலரின் எண்ணப்போக்கானது கிறிஸ்தவ நடக்கையின் உண்மையான வெளிப்பாடாக உள்ளது … நல்ல நேர்மையான கதறுதலில் வெட்கத்திற்குரியது ஒன்றும் இருப்பதில்லை, மற்றும் இது (உணர்வுகளுக்கு) வடிகாலாய் இருக்கும் செயல் விளைவைக் கொண்டிருக்கலாம். இது விசுவாசத்தின் தீவிர நிலையை அல்லது அன்பின் ஆழத்தை வெளிப்படுத்தலாம். இதற்குள்ளாக ஐக்கியத்தின் கட்டுகளும், பரிதபித்தலின் உண்மை நிலையும் கண்டறியப்படலாம் … கண்ணீரின் எதிர்நோக்கு விருப்பத்தைத் தூண்டிற்று, நான் இரவும் பகலும் … உன்னைக் காண வாஞ்சையாயிருந்து …[6]

மூன்று தலைமுறைகளாக - லோவிசாள், ஐனிக்கேயாள் மற்றும் தீமோத்தேயு (1:5) - இருந்த "மாயமற்ற விசுவாசம்"[7] என்பதே பவுலின் நன்றியுணர்வின் ஐந்தாம் பதில்செயலாய் இருந்தது.[8] வேதாகமம் விசுவாசத்தின் பல வகைகளைக் குறிப்பிடுகின்றது, ஆனால் "*மாயமற்ற* விசுவாசம்" என்பதில் விசேஷித்த சில விஷயங்கள் உள்ளன.

மாயமற்ற தன்மை என்பது விசுவாசத்தின் ஆழத்தைப் பிரதிபலிக்காமல் இருக்கலாம், ஆனால் இது தூய்மையையும் நேர்மையையும் உத்தரவாதப் படுத்துகின்றது. மூன்று தலைமுறையளவாக விசுவாசத்தில் நிலைத்திருத்தல் என்பது வேதாகம ரீதியான பதிவேட்டில் அரிதான விஷயமாகவே உள்ளது (மத். 8:11; எபி. 11:8, 9, 17, 21 ஆகியவற்றைக் காணவும்). விசுவாசம் என்பது தேவனிடத்தில் நம்பிக்கை கொள்ளுதலைக் காட்டிலும் அதிகமானதாக உள்ளது; இது கீழ்ப்படிதலை உள்ளடக்குகிறது. நாம் கிறிஸ்துவுக்குள் ஞானஸ்நானம் பெறுகையில் நமது விசுவாசம் நமது மனமாற்றத்தை உறுதிப்படுத்தும் (அப். 16:1-3; 4:4; 18:8; எபி. 5:8, 9 ஆகியவற்றைக் காணவும்).

"அது உனக்குள்ளும் நிலைத்திருக்கிறது என்று நிச்சயித்திருக்கிறேன்"[9] என்று கூறிய பொழுது விசுவாசம் நிறைந்த இந்த மூன்று தலைமுறையார்

களிடம் பவுல் விசேஷித்த நம்பிக்கை கொண்டிருந்தார். மற்றவர்கள் மீது நாம் நம்பிக்கை கொண்டிருக்கும் பொழுது, நாம் அவர்களைக் காண விரும்புகிறோம் மற்றும் அவர்களுடன் ஊழியம் செய்ய உள்ளத்தில் மகிழ்ச்சி நிறைந்தவர்களாய் இருக்கின்றோம்.

## நம்மீது அருளப்பட்டுள்ளது என்ன (வ. 6, 7)

உறுதியாய் நிலைத்திருத்தல் என்பது நமக்கு முன் சென்றுள்ளவர்களில் மட்டுமின்றி நம்மீது அருளப்பட்டுள்ள விஷயத்தினாலும் ஊக்கமூட்டப் படக் கூடும். தீமோத்தேயுவுக்கு கொடுக்கப்பட்ட தேவனுடைய வரமானது உறுதியாய் நிலைத்திருத்தலை எதிர்பார்த்தது (1:6). பவுல் தம் கரங்களை தீமோத்தேயுவின் மீது வைத்ததன் மூலம் அவருக்குத் தரப்பட்டிருந்த அற்புத வரத்தை தீமோத்தேயு, “அனல் மூட்டி” எழுப்ப வேண்டும் என்று பவுல் விரும்பினார். பவுல் ‘‘உனக்குள் இருந்த தேவ வரம்’’ என்று கூறாமல் “உனக்குள் இருக்கிற தேவ வரம்” என்றே கூறினார்.

தீமோத்தேயு தமது வரத்தைத் தக்க விதத்தில் செயல்படுத்தாமல் இருந்தால் அது, அவரது வலிவு மற்றும் ஊக்கம் ஆகியவற்றில் சிலவற்றை இழந்து போகக் காரணமாகி விடும் என்று பவுல் கவலை கொண்டிருந்தார் (1 தீமோ. 4:14). பல்வேறு வகையான செல்வாக்குகள் தீமோத்தேயுவுக்கு ஒரு “உலர்ந்த காலத்தை” பங்களித்திருக்கக் கூடும். (1) அவர் உடல் ரீதியான சுகவீனம் கொண்டிருந்தார் (1 தீமோ. 5:23). (2) பவுல் ஒருமுறை செய்திருந்தது போல (அப். 18:9, 10) இவரும் தம்மைப் பயத்திற்கு ஒப்புக் கொடுத்திருக்கக் கூடும் (1 கொரி. 16:10; 2 தீமோ. 1:7). (3) வலிவு மிக்க சூழ்நிலைகளில் தீமோத்தேயுவின் இளமையானது பயப்படுதலில் வழி நடத்தியிருக்கக் கூடும் (1 தீமோ. 4:12; 2 தீமோ. 2:22). (4) எபேசுவில் இருந்த கள்ள போதகர்களும், விரோத வயப்பட்ட ஆத்துமாக்களும் தீமோத்தேயு வின் ஆவியை முறித்துப் போட்டு அந்த இளம் மனிதரை நிழல்களுக்குள் தள்ளியிருக்கக் கூடும் (1 தீமோ. 1:3-7, 19, 20; 4:6, 7; 6:3-10; 2 தீமோ. 2:14-19, 23). (5) சகோதரர்கள் அரசிடமிருந்து சில அழிவுகளை/சீரழிவுகளைக் கொண்டிருக்கலாம் மற்றும் கிறிஸ்துவுக்காக உறுதியாக நிற்குதல் என்பது சுலபமாய் இருந்திராது (2 தீமோ. 1:8; 2:3-5; 4:4, 5).

ஆகையினால் தீமோத்தேயு தேவனிடத்திலிருந்து பெற்ற வரமானது பிரகாசமாய்ப் பற்றி எரிவதற்கு அதை அனல் மூட்டி எழுப்பி விடுவது அவசியமாய் இருந்தது. தேவனால் தரப்பட்ட தாலந்தானது மனித சித்தத்தின் பதில்செயலினால் அடக்கப்படவோ அல்லது தூண்டப்படவோ முடியும் (ரோமர் 12:1ஐக் காணவும்) என்று நாம் இதிலிருந்து கற்க வேண்டும்.

தேவன் தமது பிள்ளைகளுக்கு, உறுதியாய் நிலைநிற்பதற்கான திறவுகோலைத் தருகிறார் என்பதைப் பற்றியும் தீமோத்தேயு அறிய வேண்டியது அவசியமாய் இருந்தது (1:7). பவுல் அவரிடம், தேவன் நமக்குப் ‘‘பயப்படுதலின்’’ ஆவியைத் தராமல் பின்வருபவற்றின் ஆவியைத் தந்துள்ளார் என்பதை நினைவுபடுத்தினார்:

| | | |
|---|---|---|
| வல்லமை[10] | மற்றும் நாம் தைரியத்தைப் | பெறுகின்றோம் (2 தீமோ. 3:8) |
| அன்பு | மற்றும் நாம் பராமரிப்பை/ கவனிப்பைப் | பெறுகின்றோம் (1 கொரி. 13:1-8அ) |
| ஒழுங்கு[11] | மற்றும் நாம் கட்டுப்பாட்டைப் | பெறுகின்றோம் (1 கொரி. 9:27) |

இந்த மூன்று பண்புகள் பயத்தை வெற்றி கொள்ளும் (எபி. 13:5, 6; 1 யோவா. 4:18; தானி. 3:15-30, விசேஷமாக வ. 16-18). தேவன் நமக்கு ''வல்லமையின்'' ஆவியை அருளுகின்றார் என்பதைத் தீமோத்தேயு உணர்ந்தறிவது அவசியமாய் இருந்தது.

இந்த வார்த்தைகளில்/வசனங்களில் பவுலின் வலிவான கருத்தை ஹென்றிக்ஸன் அவர்கள் பின்வருமாறு தொகுத்துரைத்தார்:

> ஒரு நபர், தேவனுடைய திறமை மற்றும் உதவுவதற்கு அவர் எப்பொழுதும் ஆயத்தமாய் உள்ளார் என்பதை நம்புவதைக் காட்டிலும் அதிகமாக சாத்தானுடைய துன்புறுத்தும் வல்லமையைக் குறித்துப் பயப்படுகிறார் என்றால், அவர் தமது மனச் சமான நிலையை இழந்திருக்கிறார் என்றாகின்றது. தீமோத்தேயு இந்த நிலையை அடைந்திருக்கவில்லை என்பது உறுதி! அவர் சத்தியத்தைப் பற்றிக் கொண்டிருக்கட்டும்! லோவிசாளும் ஐனிக்கேயாளும் செய்தது போலவே அவரும் அதைப் பிறருக்கு அளிக்கும் விதத்தில் ... அதைப் பற்றிக் கொண்டு இருக்கட்டும்![12]

இவ்வகையில் ஒருவர் விசுவாசம் நிறைந்த தன்மையிலிருந்து கனி நிறைந்துள்ள தன்மைக்குக் கடந்து செல்லுகின்றார் (யோவா. 15:8).

## பாடம் 3: உறுதியாய் நிற்பதற்கான அறைகூவல்கள் (1:8-14)

பவுல் 1:1-7ல் உறுதியாய் நிலைத்திருப்பதற்கு மிகப் பெரிய அளவில் அஸ்திபாரத்தை இட்டார். வசனம் 8ல் தொடங்கி, அவர் இப்படிப்பட்ட அஸ்திபாரம் ஏன் அவசியமானதாக உள்ளது என்று விரித்துரைத்தார். பவுலும், தேவனுடைய ஒழுக்க விதிகளும் மற்றும் தேவனுடைய மக்களும் இந்தச் சித்தரிப்பின் ஒரு பாகமாக மட்டுமே உள்ளனர். கிறிஸ்தவ வாழ்வில் பல எதிர்பாராப் பகைகள் ஒருவருடைய ஆத்துமாவைச் சோதனைக்கு உள்ளாக்கக் கூடும். சத்தியத்தை அறிவிக்கச் சில வேளைகளில் ஒருவர் செலுத்த வேண்டிய விலை, மற்றும் விசுவாசத்தை கை விட்டுச் செல்லும் சகோதரர்கள் என்பவை போன்றவைகளைப் பற்றிய பவுலின் முன்னு ரைத்தல்களான தவிர்க்க இயலாத கூற்றுக்கள் அழுத்தத்தைக் கட்டி

*யெழுப்பி உற்சாகத்தை இழக்கச் செய்யக் கூடியவைகளாய் இருக்க முடியும். கிறிஸ்துவுக்குள் ஆவிக்குரிய வகையில் பலமில்லாது உள்ள எவரொருவரையும் அதிகமான அழுத்தம் என்பது தள்ளாடச் செய்து விடும்.*

## நமது உறுதிப்பாட்டை தடுமாறச் செய்யக் கூடிய சோதனைகள் (வ. 8)

*முதலாவது, எடுத்துக்காட்டாக ஒரு வேதாகமத்தை வெளிப் படையாகக் கொண்டு செல்ல அஞ்சுபவர்கள், அல்லது சத்தியத்திற்காக நிலைத்து நில்லாதவர்கள், தீமோத்தேயுவுக்குப் பவுலின் வேண்டுகோளை ஜாக்கிரதையாய்க் கவனிக்க வேண்டும்: "... நம்முடைய கர்த்தரைப் பற்றிய சாட்சியைக் குறித்தாவது ... நீ வெட்கப்படாமல் ..."[13] (1:8). இந்த வேண்டுகோள் நடைமுறைக்குரியதாகவும் இந்தச் சோதனை உண்மை யானதாகவும் உள்ளது. ஆழமான உறுதிப்பாடு மட்டுமே இந்தப் பிரச்சனையை வெற்றி கொள்ளக் கூடும். நாம் மக்களைப் பற்றி (மாற். 8:38; லூக். 9:26), வசனங்களைப் பற்றி, சுவிசேஷத்தைப் பற்றி (ரோமர். 1:16), கர்த்தரைக் குறித்துச் சாட்சி கொடுத்தல் பற்றி (2 தீமோ. 1:8) அல்லது உபத்திரவம் பற்றி (2 தீமோ. 1:16) "வெட்கப்பட"க் கூடும்.[14] நாம் யாவரும் ஒரே பிதாவினிடத்திலிருந்து வந்துள்ளதால், நாம் சக கிறிஸ்தவர்களை நமது சகோதரர்கள் என்று அழைக்க வெட்கப்படுகிறவர்களாக (அல்லது அதிகம் பெருமையானவர்களாக) இருக்கக் கூடாது (எபி. 2:11).*

*உங்கள் வெட்கம் எங்கு வெளிப்படுத்தப்படலாம்? வசனத்தைத் தற்காப்பதில் நீங்கள் கோழையாய் இருக்கின்றீர்களா? கிறிஸ்துவைப் பற்றிப் பிறருக்குக் கூறுவதில் நீங்கள் தயக்கம் உடையவர்களாய் இருக்கின்றீர்களா? "விலங்குகள்" குறித்து நீங்கள் வெட்கம் அடைவீர்களா? சகோதரர்களை நீங்கள் தவிர்த்து ஒதுக்குகின்றீர்களா?*

*இரண்டாவது, பவுல் தீமோத்தேயுவிடம் "... அவர் நிமித்தம் கட்டப்பட்டிருக்கிற என்னைக் குறித்தாவது நீ வெட்கப்படாமல்" என்று வேண்டுகோள் விடுத்தார். தீமோத்தேயு ஒரு குற்றம் அறியாத மனிதருடன் நிலைத்து நிற்க வேண்டும் என்று பவுல் கேட்டுக் கொண்டார். பவுல் ஒரு கலகம் செய்த சகோதரராக சிறையில் அடைக்கத்தக்க குற்றம் செய்தவர் என்ற வகையில் ஒரு கைதியாய் இருக்கவில்லை. அவர் தாம் வாழ்ந்திருந்த வாழ்வு முறைக்காக, மற்றும் இயேசுவைப் பிரதிநிதித்துவப் படுத்தியதற் காகக் கைதியாய் இருந்தார்! வெட்கமும் வருத்தமும் இல்லாத நிலையில், பவுல் தாம் "கர்த்தரின் கைதி" என்று தைரியமாய் அறிவித்தார். கிறிஸ்து ஒரு கைதியான பொழுது அவரைப் பின்பற்றியவர்கள் அவரைக் கைவிட்டுச் சென்றது போலவே பல சகோதரர்களும் பவுலைக் கைவிட்டுச் சென்றிருந்த னர் (1:15). அவர் தம்மைக் கைவிட்டு விடாதிருக்கும்படி தீமோத்தேயுவுக்கு வேண்டுகோள் விடுத்தார். நீங்கள் பவுலைக் காணச் சிறைக்குச் சென்றிருப்பீர்களா?*

*மூன்றாவது, நாம் ஒரு கைதியைப் பார்வையிடச் செல்லுவதைக் காட்டிலும் பெரிதான, அறைகூவலை எதிர்கொள்ளுகின்றோம். கிறிஸ்தவர்*

கள் சுவிசேஷத்திற்காக "பாடநுபவிப்பதில்[15] அவருடன் இணைந்து கொள்ள" தயாராக இருக்க வேண்டும். இந்தப் பாடுகளின் இயல்பானது இன்றைய நாட்களில் நமக்கு மாறுபட்டதாயிருக்கலாம்:

1. சகோதரர்களுக்கு மத்தியில் போராட்டங்கள் எழலாம். (எடுத்துக் காட்டாக, பவுலைச் சிலர் கள்ள அப்போஸ்தலர் என்று அழைத்தனர்; அப். 15; 3 யோவா. 9-11).

2. பாடு அநுபவிக்கும் சகோதரர்கள் குறித்து நாம் அக்கறையுள்ள வர்களாய் இருக்க வேண்டும் (எபி. 10:32-36; ரோமர் 15:1, 2; 2 கொரி. 11:28).

3. நெருக்கடியான நிலையை எதிர்கொண்டுள்ள சகோதரர்களுக்கு நமது ஆதரவு தேவைப்படலாம் (எபி. 13:3).

4. நாம் தண்டனைகளையும் அறைகூவல்களையும் பிற மதங்களிடமிருந்து (அப். 4:5-22; 5:17-42; 18:5-11), அரசுகளிடமிருந்து (அப். 21:32, 33; 23:10; 28:31; யோவான் 18:29-19:30), அல்லது துன்மார்க்கரான மனிதர்களிடமிருந்து (மத். 5:10-12; 2 தீமோ. 3:11-13; 4:14) எதிர் கொள்ளலாம்.

உறுதியாய் நிற்குதலுக்கான இந்த சோதனைகள் பண்பு மற்றும் தைரியம், அஞ்சாமை மற்றும் செயல்படுதல் ஆகியவற்றிற்கு அழைப்பு விடுக்கின்றன. இவைகள் ஒரு ஆழமான உறுதிப்பாட்டைக் கேட்கின்றன. *நீங்கள் இப்படிப்பட்ட சோதனைகளுக்குத் தயாராக இருக்கின்றீர்களா?* நீங்கள் இந்த கண்டிப்புகளுக்குத் தயாராய் இருக்க விரும்பினால், எபிரேயர் 10:32-39ஐ வாசியுங்கள். அடுத்ததாகப் பவுல், உண்மையான ஊழியத்திற்கு நம்மைத் தயார் செய்வதற்கு ஊக்கமூட்டும் கருத்துக்களைத் தந்தார்.

## நமது உறுதிப்பாட்டை நிலைக்கச் செய்யும் காரணங்கள் (வ. 8-10)

சோதனைகள் என்பவை, ஆவிக்குரிய வகையில் பலவீனமாய் இருக்கும் ஆத்துமாக்களைப் பயப்படுத்தக்கூடும். ரோனால் வார்டு என்பவர் எடுத்துரைத்தபடி:

> தீங்கிழைத்ததினால் விலங்கிடப்பட்ட நிலையில் உள்ள சபை நடத்துநர் ஒரு முட்டுக்கட்டையாக, அவமானமாக, கர்த்தரையே மரணத்திற்கு உட்படுத்தியவராக இருக்கின்றார். பகட்டு மிக்க புற தெய்வ வழிபாட்டாளர்கள், இப்படிப்பட்ட செல்வாக்கின் கீழ் உள்ள சமுதாயத்துடன் ஐக்கியத்தை விரும்ப மாட்டார்கள்; மற்றும் சில கிறிஸ்தவர்களின் அன்பானது தணிந்துபோம் (மத். 24:12ஐக் காணவும்). சிலர் புரிந்து கொள்ளுதலில் தவறி விட்டு, கர்த்தர் தமது ஊழியனைக் கைவிட்டிருந்தது ஏன் என்று வியப்படைகின்றனர்.
>
> இதில் எதையும் பவுல் கொண்டிருந்ததில்லை மற்றும் இதைப் புறம்பே தள்ளியிருந்தார் என்று மறைமுகமாய் உணர்த்தப்படுகின்றது. அவர் விலங்கிடப்பட்டிருந்ததால், அவர் இராஜாவின் கைதியல்ல. *நம்முடைய கர்த்தர்* என்றும் மற்றும் *நான் அவரது கைதி* என்றும் பேசினார். அவர் சிறையில் இருந்து தப்பிக்கவில்லை, ஆனால் அவர்

*தம் சிறை அதிகாரியை மாற்றிக் கொண்டிருந்தார். அவர் கர்த்தருடைய கைதியாக, கர்த்தருடைய ஊழியத்தில் செய்யப்பட்டிருந்தவற்றிற்காக சிறைச்சாலைக்குள் கொண்டு வரப்பட்டவராக மற்றும் தேவனுடைய அருளிரக்கத்தினால் சிறையில் அவர் (ஊழியம்) செய்யக் கூடியவராக இருந்தார் ... கர்த்தர் தமது ஊழியக்காரர்களை எல்லா வேளை களிலுமே "மீட்பது"/"இடர்ப்பாட்டில் இருந்து காப்பாற்றுவது" இல்லை. ஆனால் அவர்கள் சகித்துக் கொண்டுள்ள இருளான பின்புறத்திற்கு எதிராக, அவர்கள் தாங்களே இந்த உலகத்திற்கு வெளிச்சமாகப் பிரகாசிக்கின்றனர். இப்படிப்பட்ட எண்ணப் பிரதிபலிப்புகளினால் தீமோத்தேயு தைரிய மூட்டப்படக்கூடும்.*[16]

*சுவிசேஷத்திற்காக ஏற்படும் இவ்விதத் துன்பங்களை அனுபவிப்பதில் ஒருவர் எவ்விதம் அவற்றைச் சமாளிக்கக் கூடியவராகிறார் என்பதே அவருடைய வல்லமையாய் உள்ளது (1:7, 8).* செல்வம் பற்றிய மனதில் பதியும் விவரிப்பை முன் வைத்த பவுல் தேவனுடைய வல்லமையில் இருந்த பலனளிக்கும் பயன்களையும் முன் வைத்தார்.

*தேவனுடைய சினம் தணிக்கும் நிகழ்வை ஆழ்ந்து சிந்தியுங்கள்.* தேவன், "நம்மை இரட்சித்து[17] *பரிசுத்த அழைப்பினாலே*[18] *அழைத்தார்" (1:9).*

*தேவனுடைய நோக்கத்தை ஆழ்ந்து சிந்தியுங்கள்!* நமக்கான அவருடைய நோக்கமானது கிருபையினால் ஆனதாக உள்ளது. அவருடைய நோக்கம் கிறிஸ்துவுக்குள் உள்ளது (அப். 4:12; 1 யோவா. 4:14). கிறிஸ்தவர் களுக்கான தேவனுடைய நோக்கமானது நித்திய காலங்களுக்கு முன்ன தாகவே தீர்மானிக்கப்பட்டிருந்தது (1 பேது. 1:10-12, 18-21). என்ன ஒரு நோக்கம்! நாம் பாவத்தில் *மரித்தவர்களாய்* இருந்த போதே, அவர் நம்மைக் கிறிஸ்துவுடன் *உயிர்ப்பித்தார்*. அவருக்குள் நாம், இந்தப் பூமியின் மீது இருந்தவர்களிலேயே மாபெரும் நபருடன் (அவர் இப்பொழுது பரலோகத்தில் உள்ளார்) மற்றும் நித்தியத்திலிருந்து நித்தியத்திற்கான மாபெரும் திட்டத்துடன் உறவுபடுத்தப்படுகின்றோம்! இந்த சந்தர்ப்பப் பொருளில் பவுல் கூறி முடித்துள்ள யாவும் எபேசியர் 3:1-13ல் எடுத்துரைக் கப்பட்டுள்ளது. இந்த நோக்கத்துடன் தொடர்புடைய மகிமை மற்றும் மேன்மையை உணர நாம் நாடுகையில், இதை நாம் நம்ப முடியுமா? ஆதாரம் தொடர்கின்றது.

*கிறிஸ்துவின் ஆதாரத்தை/நிரூபனத்தை ஆழ்ந்து சிந்தியுங்கள்:* "நம்முடைய இரட்சகராகிய இயேசு கிறிஸ்துவின் பிரசன்னமாகுதல்" (1:10). இயேசு ஜீவனின் நிலைக்குள் பிரவேசித்து *தமது பிரசன்னத்தினாலே* தேவனுடைய நித்திய நாடகத்தின் அந்தப் பகுதியை நிறைவேற்றிய காரணத்தினால் எத்தனை விஷயங்கள் "(தத்தமது) இடத்தில் விழுந்து (அமைந்து) உள்ளன" என்பதை ஒரு கணம் சிந்தித்துப் பாருங்கள். இஸ்ரவேலின் வரலாற்றில்[19] தேவன் இடையிட்ட இரு தருணங்களைக் குறிப்பிட்ட பார்க்ளே, அதன் பிறகு "பிரசன்னம்" என்ற கிரேக்கச் சொற்றொடர் மீது பின்வரும் விளக்கவுரைகளைக் கூட்டினார்:

*எனவே, epiphaneia என்ற இவ்வார்த்தையானது யூதர்களுக்கு,*

தேவனுடைய காப்பாற்றும் மற்றும் இரட்சிக்கும் இடையிடுதலைக் குறிப்பிட்டது.

கிரேக்கர்களுக்கு இது (அதே) சம அளவான மாபெரும் வார்த்தை யாக இருந்தது. பேரரசர் தமது அரியணை ஆட்சிக்குச் சென்று சேரும் வழியானது *epiphaneia* என்று அழைக்கப்பட்டது. இது அவரது வெளிப்பாடாக இருந்தது. ஒவ்வொரு பேரரசரும் உயர்ந்த நம்பிக்கைகளுடனேயே அரியணை ஆட்சிக்கு வந்தனர்; அவரது வருகையானது புதிய மற்றும் விலை மதிப்பு மிக்க ஒரு நாளின் உதயம் போன்று உயர்த்தப்பட்டது, மற்றும் மாபெரும் ஆசீர்வாதங்கள் வருவதாயிருந்தது.

சுவிசேஷமானது இயேசுவின் *epiphaneia* உடன் முழுமையாய்க் காட்சிப்படுத்தப்பட்டது; மற்றும் இந்த வார்த்தையே, இயேசு தேவனுடைய மாபெரும், காக்கின்ற இடைப்படுதலாகவும் வெளிப்பாடாகவும் உலகில் இருந்தார் என்பதைக் காண்பிக்கின்றது; மற்றும் இது இயேசுவின் வருகையானது அரியணையில் இயேசுவால் உயர்த்தப்படுதலின் தொடக்கமாய் இருந்தது இது முடிவில் தேவனுடைய அரசின் அரியணையில் இருக்கும் என்பதையும் காண்பிக்கின்றது.[20]

இந்த வேளையில் பவுல் கிறிஸ்துவின் தோற்றத்தினுடைய இரு நிறைவேற்றங்களை/சாதனைகளை சுட்டிக்காண்பித்தார்:

1. விரோதியானவன் நீக்கப்பட்டான் - ''அவர் மரணத்தைப் பரிகரித்தார்.'' 1 கொரி. 15:24-26ஐக் கவனியுங்கள். கிறிஸ்து உயிர்த்தெழுத லாகவும் ஜீவனாகவும் இருக்கின்ற காரணத்தினால் (யோவா. 11:25), அவர் மரணம் என்ற விரோதியை மேற்கொண்டு அதை வீணானதாக்கி, மரணத்தையும் கூட வெற்றியாகத் திருப்பினார் (1 கொரி. 15:50-57; பிலி. 3:7-14; 1:21-23).

2. இந்த ஒளியூட்டப்படுதல் இப்பொழுது பக்தி விருத்தியூட்டுகின்றது: ''இவர் ஜீவனையும்[21] அழியாமையையும் சுவிசேஷத்தின் மூலமாக வெளிச்சத்திற்குக் கொண்டு வந்தார்.'' இந்த ஜீவன் என்பது இப்பொழுது இருப்பதைக் காட்டிலும் எவ்வளவோ அதிகமானதாக உள்ளது; பவுல் பயன்படுத்தியுள்ள வார்த்தையானது மகிழ்ச்சியையும் பேரின்பத்தையும் கருத்தாய்த் தெரிவிக்கின்றது. இந்த நல்வாழ்வானது ''அழியாமையின்''[22] ஒன்றாக உள்ளது.

தேவன் நம்மை ஒரு நல்ல மற்றும் பரிபூரணமான வாழ்வுக்கென்று (மத். 5:16; யோவா. 10:10; 13:17) அழைத்துள்ளார், அத்துடன் அவர் அழியாமையின் பரிமாணத்தையும் கூட்டியுள்ளார் (யோவா. 5:24; 8:51; 2 கொரி. 4:16-5:1). இப்படிப்பட்ட ஒளியூட்டுதலானது இப்பொழுது தைரியத்தையும் நம்பிக்கையையும் கொடுப்பதாக மற்றும் (முன்னேறும்) வழியில் இன்னும் மேன்மையடைவதாக மட்டுமே உள்ளது. (1 பேது. 1:3-9ஐக் கவனிக்கவும்.) ஹென்ரிக்ஸென் அவர்கள் எழுதியுள்ளபடி,

இப்பொழுதே இங்கேயே விசுவாசி கொள்கையளவில் இந்த மாபெரும் ஆசீர்வாதத்தைப் பெற்றுக் கொள்கிறார் மற்றும் இது

> *பரலோகத்தில் இன்னும் மேம்படுகின்றது என்பது தெளிவானதாகவே இருக்கின்றது என்றாலும் கூட அவர் கிறிஸ்துவின் மறுதரிசனத்தின் நாள் வரும் வரையிலும் இதை முழுமையாகப் பெற்றுக் கொள்வ தில்லை. அந்த நாள் வருகின்ற வரையிலும், எல்லா விசுவாசிகளின் உடல்களும் இன்னமும் அழிவு மற்றும் மரணத்தின் சட்டங்களுக்குக் கீழ்ப்பட்டதாகவே இருக்கும். அழிவில்லாத வாழ்வு, அழிக்க முடியாத இரட்சிப்பு என்பது அதன் முழுமையான கருத்தில் புதிய வானத் திற்கும் புதிய பூமிக்கும் உரியதாக இருக்கின்றது. இது நமக்காகச் சேர்த்து வைக்கப்பட்டுள்ள சுதந்திரமாக உள்ளது.*[23]

*சுருக்கமாக,* பவுல் தீமோத்தேயுவுக்கு, "மனிதர்கள் கர்த்தருடைய மக்களுக்கு என்ன செய்கின்றனர் என்பதை மட்டும் கண்ணோக்கிக் கொண்டிராதே. *கர்த்தர் தம்முடைய மக்களுக்கு என்ன செய்துள்ளார் என்பதைக் கண்ணோக்கிப் பார். கிறிஸ்துவின் தரிசனத்திலிருந்து பளிச்சிடுகின்ற பயன்களை நோக்கி உன் கண்களை ஏறெடுப்பாயாக, மற்றும் வெட்கப்படாதே. உனது தலையை உயர்த்தி, எஜமானருக்காக வீர நடையிடு!"* என்று கூறினார்.

## நமது உறுதிப்பாட்டை திடப்படுத்துவதற்கு ஒரு உதாரணம் (வ. 11, 12)

இயேசு கொண்டிருந்தது போன்ற அதே வகையான தர அளவையை அமைக்கும் நோக்கத்துடன் பவுல் வாழ்ந்திருந்தார் *(1 கொரி. 11:1; யோவா. 13:3-17; 1 பேது. 2:1-15).* பவுலின் பணிப் பொறுப்பானது மும்மடங்கு பொறுப்புகளைக் கொண்டிருந்தது, இவற்றில் எந்த ஒன்றுமே பெரும்பாலான மனிதர்களுக்கு அறைகூவல் விடுப்பதாகவே இருந்தது. இம்மூன்றிலும் பவுல் மன ஊக்கமும் செயல்விளைவும் கொண்ட ஊழியக்காரராகவே திகழ்ந்தார். அவர் தம்மைத் தேர்ந்து கொண்டவர் மீது தாம் நம்பிக்கை வைத்திருந்த காரணத்தினால் ஊழியம் செய்வதில் உறுதியாய் நிலைத்து நின்றார் *(கலா. 1:15, 16; அப். 9:15, 16).*

நாம் பவுலின் தேர்ந்து கொள்ளுதலில் - *யார்* தேர்ந்து கொண்டார் மற்றும் அவர் ஒப்படைத்தது *என்ன* என்ற இரு நிலைப்பாடுகளிலும் இருந்து - உள்ள தனிச் சிறப்பை நிச்சயமாகவே காண்கின்றோம். பவுல், "நான் ... நியமிக்கப்பட்டேன்"[24] *(1:11)* என்று எழுதினார். பவுல் என்ன செய்ய முடியும் என்பதைத் தேவன் அறிந்திருந்தார். ஆகையால், அவர் (தேவன்) அவரை (பவுலை) "பிரசங்கியாராக"[25] இருக்கும்படி நியமித்தார். பார்க்ளே அவர்கள் பின்வருமாறு கவனித்துள்ளார்:

> *Kerux* [பிரசங்கியார்] என்ற கிரேக்க வார்த்தை விரிவான அர்த்தம் கொண்டதாக உள்ளது. இது மூன்று முதன்மை வரிசைகளின் அர்த்தம் கொண்டுள்ளது, அவை ஒவ்வொன்றும் கிறிஸ்தவக் கடமை பற்றி ஆலோசனை கூறச் சில கருத்துக்களைக் கொண்டுள்ளன. *Kerux* என்பவர் அரசரிடமிருந்து அறிவிப்பைக் கொண்டு வந்து அறிவிப் பாளராக இருந்தார். *Kerux* என்பவர், இரு படைகள் ஒன்றுக்கொன்று

எதிர்த்து நின்ற பொழுது தூதராயிருந்து போர் நிறுத்தம் மற்றும் சமாதானத்திற்கான நிபந்தனைகள் அல்லது வேண்டுகோளைக் கொண்டு வந்தார். *Kerux* என்பவர், ஒரு ஏல வியாபாரியோ அல்லது வர்த்தகரோ தமது பொருள்களைப் பற்றிக் கூவி, மக்களை வந்து வாங்கும்படி அழைக்குமாறு பணிக்கு அமர்த்தப்பட்டவராய் இருந்தார். எனவே கிறிஸ்தவர் என்பவர் தமது சக மனிதருக்கு செய்தியைக் கொண்டு வருபவராயிருக்க வேண்டும்; அவர் மனிதர் களைத் தேவனுடன் போர் நிறுத்தம் மற்றும் சமாதானம் செய்து கொள்ளும்படி கொண்டு வருகின்றவராய் இருக்க வேண்டும்; அவர் தம் சக மனிதர்களை தேவன் அவர்களுக்கு ஏற்படுத்தியுள்ள வளம்மிக்க அளிப்புக்களைப் பெறும்படி அழைக்கின்றவராய் இருக்க வேண்டும்.[26]

*இரண்டாவது, பவுல் ஒரு "அப்போஸ்தலராக"[27] நியமிக்கப்பட்டார். "Apostolos [அப்போஸ்தலர்] என்பவர் தமக்காகப் பேசவில்லை; அவர் தம்மை அனுப்பியவருக்காகப் பேசினார். Apostolos என்பவர் தமது சொந்த அதிகாரத்தில் வந்திருக்கவில்லை; அவர் தம்மை அனுப்பியவரின் அதிகாரத்தி லேயே வந்தார்."[28] கிறிஸ்துவே பவுலை அனுப்பியவராய் இருக்கின்றபடி யால், பவுலுக்கும் மற்ற அப்போஸ்தலர்களுக்கும் அது எவ்வளவு பெரிதான அதிகாரத்தைக் கொடுத்தது! (மத். 28:18-20; லூக். 10:16; எபே. 2:19-3:5).*

*மூன்றாவது, பவுல் ஒரு "போதகராக"[29] நியமிக்கப்பட்டார். போதகர் என்பவர் கிறிஸ்துவுக்காக ஒரு வியூகமான/நுட்பம் நிறைந்த பணிப் பொறுப்பைச் செய்கின்றார்:*

தேவனுடைய அன்பின் செய்தியைக் கொண்டு மனிதர்களுக்கு வேண்டுகோள் விடுப்பதும், மனிதர்களை எதிர்கொண்டு நிற்பதும் சுவிசேஷ ஊழியரின் திறன்மிக்க பணியாக உள்ளது. தெளிவாய்க் காணப்படும் உணர்வின் ஒரு கணத்தில், … ஒரு மனிதர் அந்த வேண்டுகோள்களுக்குப் பதில்செயலாக செய்யலாம். ஆனாலும் இன்னமும் ஒரு நீண்ட சாலை நிலைத்துள்ளது. அவர் அதன் அர்த்தத்தைக் கற்றாக வேண்டும்; அவர் கிறிஸ்தவ வாழ்வின் ஒழுங்கு முறையைக் கற்றாக வேண்டும். விதை நடப்பட்டாயிற்று; ஆனால் வளர்ச்சியின் நீண்ட மெதுவான செயல்முறை இன்னமும் வர வேண்டியதாக உள்ளது. அஸ்திபாரங்கள் போடப்பட்டுள்ளன; ஆனால் கிறிஸ்தவ வாழ்வின் பெரும் கட்டிடங்கள் இனியும் எழுப்பப் பட வேண்டியவைகளாய் உள்ளன. சுவிசேஷ ஊழியத்தின் சுடரானது கிறிஸ்தவ போதனையின் சீரான ஒளிர்தலால் பின்பற்றப்பட வேண்டியதாக உள்ளது.[30]

*இவ்விதமாக, விளக்கத்தின்படி, ஒரு ''பிரசங்கியார்'' மக்களின் கவனத்தைப் பெறுகின்றார், ஒரு ''அப்போஸ்தலர்'' மனித குலத்திற்கு பரலோகத்தின் செய்தியை அதிகாரத்துடன் அமுல்படுத்துகின்றார், மற்றும் ஒரு "போதகர்" வளர்ச்சிக்கான திட்டவட்டமான வழிகாட்டுதல்களைக் கொடுக்கின்றார். இந்த முக்கியமான ஊழியங்கள் யாவற்றையும் பவுல் நிறைவேற்றிப் பணியாற்றினார். பவுலுக்கு திட்டவட்டமான மூன்று பணிகள் கொடுக்கப்பட்டிருக்கையில், அவற்றில் பின்வரும் இரண்டின்*

ஊழியத்தை ஒரு சுவிசேஷகர் செய்தாக வேண்டும்: ஒரு பிரசங்கியாராகவும் போதகராகவும் இருத்தல் (2 தீமோ. 4:1-5; 2:2; தீத்து 1:5; 2:15 ஆகியவற்றைக் காணவும்).

பவுல் பாடநுபவிக்கும் ஒரு ஊழியக்காரராயிருந்தார் (1:12). அவர் குற்றவுணர்வின் பண்பினால் "தண்டனைக்கு ஆளானவராக" இருக்க வில்லை. மாறாக, அவர் பேதுரு மற்றும் கிறிஸ்து ஆகியோரின் ஆவியில் ஊழியம் செய்தார் (1 பேது. 3:15-18ஐக் காணவும்). அவருடைய பணிப் பொறுப்பானது பொறுப்பற்றதாகவோ அல்லது தப்பிக்க இயலாததாகவோ இருந்ததில்லை (2 கொரி. 4:16-5:10ஐக் காணவும்). பவுல் தமது பாடுகளுக்கு ஒரு "காரணம்"[31] இருந்ததென்று அறிந்தார். பவுல் தமது பாடுகளை அறிவிற்கு ஏற்புடையதாகக் கண்டார் என்று சந்தர்ப்பப் பொருள் உறுதிப்படுத்துகின்றது. சபை வளர வேண்டும் மற்றும் ஒவ்வொரு படைப்புக்கும் சுவிசேஷம் பரப்பப்பட வேண்டும் என்றால் தாம் பயணப்பட வேண்டிய ஒரு ஓட்டமாக அது இருந்தது என்று அவர் அறிந்தார் (கொலோ. 1:23-29ஐக் காணவும்).

இந்தக் "காரணத்திற்காக" பாடநுபவித்தல் பற்றிப் பவுல், "நான் வெட்கப்படுகிறதில்லை" என்று எழுதினார். மீண்டும் ஒருமுறை நாம் பாடுகள் மற்றும் வெட்கம் (வசனம் 8ஐக் காணவும்) என்பவற்றை எதிர் கொள்ளுகின்றோம். இவைகள் ஒன்றாய்ச் செல்லலாம், ஆனால் அது கிறிஸ்துவினிமித்தமாக இருக்கும் பொழுது பவுல் வெட்கம் அடைய மாட்டார். கிறிஸ்துவினிமித்தம் ஒரு விசாரணைக்கு உட்பட்ட நிலையில் நீங்கள் எப்பொழுதாவது வெட்கம் அடைந்துள்ளீர்களா அல்லது அமைதியாய் இருந்துள்ளீர்களா?

"வெட்கப்படுதல்" என்பதற்கு தரப்பட்டுள்ள விளக்கமானது நாம் எந்தெந்தத் துறைகளில் வெட்கப்பட நேரிடலாம் என்று வேத வசனம் குறிப்பிடுவதைத் திட்டவட்டமாய்த் தருகின்றது: (1) சில சகோதரர் அல்லது சகோதரிகளைக் குறித்து, (2) வசனங்கள் அல்லது சுவிசேஷத்தைக் குறித்து, (3) கர்த்தருக்கு அல்லது கர்த்தருக்காகச் சான்றுரைப்பது குறித்து, (4) நாம் தாங்கிக் கொள்ளும்படியாகக் கிறிஸ்தவம் அழைக்கின்ற வாழ்க்கை முறை குறித்து (எபி. 10:32-36ஐக் காணவும்). இவ்வித சூழ்நிலைகளின் கீழ் இருக்கின்ற கிறிஸ்தவர்கள் "சிறுபிள்ளைத் தனமானவர்கள்" என்று அழைக்கப்பட முடியாது. இந்த அறைகூவல்கள் உண்மையானவைகளாய் உள்ளன மற்றும் இவைகள் பலவீனமானவர்களால் சந்திக்கப்பட முடியாது (1 கொரி. 16:13, 14; எபே. 6:10-18ஐக் காணவும்).

பவுல் வெட்கத்தை ஏற்றுக் கொண்டது தேவன் மீதான திடமான நம்பிக்கையின் அடிப்படையிலான முற்றிலும் பகுத்தறிவு வாய்ந்த செயலாக இருந்தது.

## நமது உறுதிப்பாட்டை ஊக்கப்படுத்துகின்ற ஒரு ஆதார மூலம் (வ. 12)

"அதினிமித்தம் நான் இந்தப் பாடுகளை அனுபவிக்கிறேன். ஆயினும்

நான் வெட்கப்படுகிறதில்லை; ஏனென்றால், நான் விசுவாசித்திருக்கிறவர் இன்னார் என்று அறிவேன், நான் அவரிடத்தில் ஒப்புக்கொடுத்ததை அவர் அந்நாள் வரைக்கும் காத்துக்கொள்ள வல்லவராயிருக்கிறாரென்று நிச்சயித்துமிருக்கிறேன்" (1:12) என்று பவுல் கூறுகையில் அவரது சாட்சியம் தொடர்ந்தது.

தேவனுக்கு அர்ப்பணித்தல் என்பது தவறாக வைக்கப்பட்ட பக்தியூட்டுதலாயிருப்பதில்லை. பவுல், ''நான் ... இன்னாரென்று அறிவேன்''[32] என்று எழுதினார். அறிவு அல்லது அறிதல் என்பதை வலியுறுத்த இந்த கிரேக்க வார்த்தையைக் காட்டிலும் பலத்த வார்த்தை வேறெதுவும் இருப்பதில்லை! பவுல் தாம் கர்த்தரை அறிந்துள்ளதின் (மற்றும் நம்பியுள்ளதின்) மூன்று நிலைகளை அடையாளப்படுத்தினார்.

1. "நான் விசுவாசித்திருக்கிறவர் இன்னார் என்று அறிவேன்."[33] பவுலின் வாழ்வானது, வேதாகம ரீதியான விசுவாசம் - தேவன் அங்கீகரித்த விசுவாசம் - என்பது கிறிஸ்துவில் நம்பிக்கை கொள்ளுதல் மட்டுமின்றி கீழ்ப்படிதலுடனும் இணைக்கப்பட்டுள்ளது என்ற உண்மையில் வாழ்கின்ற செயல்விளக்கமாய் இருந்தது! பாடநுபவித்தலுடன் தொடர்பு படுத்தப் படுகையில் பவுலின் நம்பிக்கையானது கீழ்ப்படிதலையும் கூட மறைமுக மாய் உணர்த்திற்று (பிலி. 3:7-11ஐக் காணவும்). அவ்வளவு ஆழமிக்க விசுவாசமானது சத்தியத்திற்கும் தேவனுக்கும் புகழுரையாக உள்ளது.

2. "நான் நிச்சயித்துமிருக்கிறேன்." 1:5ன் மீதான கலந்துரையாடலை மறுகண்ணோட்டம் இடுங்கள், அங்கு பவுல் தீமோத்தேயுவின் உண்மை யான விசுவாசத்தில் தாமே கொண்டுள்ள முழுமையான நம்பிக்கைக்குத் தொடர்புடைய இந்த ஒரே மாதிரியான சொற்றொடரைப் பயன் படுத்தினார். இந்த வேளையில் பவுல் தீமோத்தேயுவிடம் தமது சுயமாய்ப் பேணிய விசுவாசத்தை வலியுறுத்தியதாகக் காணப்படுகிறது.

3. கிறிஸ்துவில் பவுல் கொண்டிருந்த நம்பிக்கையானது அவரை இரட்சகருக்கென்று சிலவற்றை ஒப்புக்கொடுக்கும்படி செய்யக் காரண மாயிற்று. இவ்விடத்தில் கிரேக்க வாக்கியமானது நேர்ப் பொருளில், கர்த்தர் "காப்பதற்கு என்னை சேர்த்து வைக்கக்" கூடியவராய் இருக்கிறார் என்றே கூறுகின்றது. இந்த சேர்த்து வைத்தல் என்பது என்ன? இந்தச் சொல் விளக்கம் பற்றிய கண்ணோட்டங்கள் ரோனால்டு வார்டு அவர்களால் நன்கு தொகுத்துரைக்கப்பட்டுள்ளன:

> சேர்த்து வைத்தல் என்பதைச் சில கல்வியாளர்கள் சுவிசேஷம் (இ.வ. 14) என்பதாகக் கருதுகின்றனர் ... மற்றவர்கள் இதை பவுல் தம்மைத் தாமே, தம்முடைய ஆத்துமாவை குறித்ததாகக் காண்கின்றனர். பிந்திய கண்ணோட்டமானது கடைசி நாள் சிந்தனை மற்றும் விசுவாசம் அல்லது நம்பிக்கையின் கருத்து, ஆகியவற்றின்படி மேன்மையானதாகக் காணப்படுகின்றது, விசேஷமாக விசுவாசம் என்பது ஒருவர் தம்மை நம்பிக்கையுடன் கிறிஸ்துவிடம் ஒப்புக் கொடுத்தல் என்று அர்த்தப்படுகிறதென்றால் இது மேன்மையான தாகக் காணப்படுகின்றது. "சேர்த்து வைத்தல்" மற்றும் "விசுவாசம்" என்பவற்றிற்கு இடையில் உள்ள இணைப்பானது 1 பேது. 4:19ல்

காணப்படலாம், "... தங்கள் ஆத்துமாக்களை உண்மையுள்ள (நம்பிக்கைக்குப் பாத்திரரான) சிருஷ்டி கர்த்தாவாகிய அவருக்கு ஒப்புக் கொடுக்கக் கடவர்கள்." பவுல் தாமே இதே வினைச் சொல்லை ("சேர்த்து வைத்தல்" என்ற பெயர்ச் சொல்லுடன் தொடர்புடையதாய் இருக்கின்றது) அப். 20:32ல் நேரடியாகப் பயன்படுத்தினார். "... தேவனுக்கும் ... உங்களை ஒப்புக் கொடுக்கிறேன்." பெனகல் என்பவர் இவ்விஷயத்தை ஏற்ற வகையில் தொகுத்துரைத்தார்: "விட்டுச் செல்லும் நிலையிலுள்ள பவுல் இரு ஒப்புக் கொடுத்தல் களைக் கொண்டிருந்தார், ஒன்று கர்த்தருக்கு ஒப்புக் கொடுத்தல், மற்றும் இன்னொன்று தீமோத்தேயுவுக்கு ஒப்புக் கொடுத்தல்." இவ்விதமாக, அப்போஸ்தலருக்கு பாடநுபவித்தல் வெட்கத்தைக் கொண்டு வந்ததில்லை மற்றும் விசுவாசம் நிச்சயதன்மையை அர்த்தப்படுத்திற்று. வசனம் 8ல் பவுல் தமது சிறையிருப்பைக் கருதுகையில் "மயங்கி விழாமல் நடந்ததை"யும் ஆனால் வசனம் 9ல் தேவனுடைய வல்லமை மற்றும் கிருபையினைக் கருதும் ஒரு ஓட்டத்தை தன்னிலே தொடங்கி விரைவிலேயே கழுகுகளின் செட்டைகளுக்கு ஒப்பாக உயர்ந்ததையும் (இ.வ. ஏசா. 40:31) கவனியுங்கள். இப்படிப்பட்ட ஏவுதலுடன் அவர் வெட்கத்தை அறியாதிருந்தார். தீமோத்தேயுவும் இதே போலிருக்க முடியும்.[34]

கிறிஸ்து அழியாமையை வெளிப்படுத்தியிருந்ததாக பவுல் அப்பொழுது தான் அறிவித்திருந்தார் (1:10). அவர், "நான் அவரை அறிவேன். நான் விசுவாசித்தேன். நான் உறுதியாய் நம்பினேன். ஆகையால் நான் என்னை அவருடைய பாதுகாப்பில் ஒப்படைத்தேன்" என்று தைரியத்துடன் உறுதிப்படுத்தினார். மரணத்தை நெருங்கிக்கொண்டிருந்த ஒரு கைதியிடம் இருந்து வந்துள்ள இப்படிப்பட்ட தைரியமிக்க விளக்கங்கள் நமக்குள் உறுதியாய் நிலை நிற்குதலைத் தூண்ட வேண்டும்!

## நமது உறுதிப்பாட்டைத் தொகுத்துரைக்க ஒரு கட்டளை (வ. 13, 14)

பவுல் தீமோத்தேயுவுக்கு ஒரு கட்டளையைக் கொடுத்து, அது தம்மிடத்திலிருந்து வந்ததென்று வலியுறுத்துகையில் அப்போஸ்தலத்துவ அதிகாரம் தெளிவாய்க் காணப்படுகின்றது. அவர், "நீ கிறிஸ்து இயேசுவைப் பற்றும் விசுவாசத்தோடும் அன்போடும் என்னிடத்தில் கேட்டிருக்கிற ஆரோக்கியமான வசனங்களின் சட்டத்தைக் கொண்டிரு. உன்னிடத்தில் ஒப்புவிக்கப்பட்ட அந்த நற்பொருளை நமக்குள்ளே வாசம் பண்ணுகிற பரிசுத்த ஆவியினாலே காத்துக் கொள்" (1:13, 14) என்று கூறினார்.

"ஓட்டத்தைக் காத்துக் கொள்" என்பது கட்டளையின் முதல் பாகமாக உள்ளது. அவர், "ஆரோக்கியமான வசனங்களின் சட்டத்தைக் கைக் கொண்டிரு"[35] என்று கூறினார். பவுல் உறுதிப்படுத்தியது "கட்டாய மானதாக" இருந்தது. தீமோத்தேயு (அல்லது எந்த ஒரு சுவிசேஷ ஊழியரும்) என்ன செய்ய வேண்டும் என்பதைப் பற்றி பவுல் வலியுறுத்தியது மட்டுமின்றி தீமோத்தேயுவுக்கான தம் கட்டளை எவ்விதமாகக் கைக்

*கொள்ளப்பட வேண்டும் என்பதையும் அவர் அடையாளப்படுத்தினார்:*

| | |
|---|---|
| *விசுவாசத்தில்* | *- கட்டளையைக் கைக்கொள்வதற்கான பலம் (1 யோவா. 5:4)* |
| *அன்பில்* | *- கட்டளை கைக்கொள்ளப்பட வேண்டிய ஆவி (1 கொரி. 13:4-8)* |
| *கிறிஸ்துவுக்குள்* | *- கட்டளையின் ஆதார மூலம் (பிலி. 4:13; ரோமர் 8:35-39)* |

*அந்த ஓட்டத்தை ஆளுகை செய்கின்ற ஆதார மூலத்தைக் காத்துக் கொள்ளுதலே கட்டளையின் இரண்டாம் பாகமாக உள்ளது. இது பரிசுத்த ஆவியானவர் மூலமாகச் செய்யப்பட வேண்டியதாக உள்ளது (1:14).*

பவுல் மறுபடியும் ''சேர்த்து வைத்தல்'' (ஒப்புவிக்கப்பட்ட சில விஷயங்கள்) என்பதற்குரிய கிரேக்க வார்த்தையைப் பயன்படுத்தினார், இம்முறை அதை "நற்பொருள்"[36] என்று அழைத்தார். தீமோத்தேயுவிடம் ஒப்புவிக்கப்பட்ட நற்பொருளானது அவருக்கும் (மற்றும் நமக்கும்) "காக்க"[37] வேண்டிய பொருளாக உள்ளது என்று கட்டளையிடுகையில் அவர் ஒரு படைவீரரைப் போலக் குரல் கொடுத்தார், இந்தக் காத்துக் கொள்ளுதல் என்பது "நமக்குள் வாசம் பண்ணுகிற பரிசுத்த ஆவியானவர் மூலமாகச்" செய்யப்பட வேண்டும். ஹென்ரிக்ஸென் அவர்கள் இவ்வாறு விளக்கமளித்தார்.

> தீமோத்தேயு இந்த நற்பொருளைக் காத்துக் கொள்ளும்படி முடிவாக ஒரு தரம் வற்புறுத்தப்பட்டுள்ளார். அவர் அதை ஒவ்வொரு தாக்குதலுக்கும் எதிராகத் தற்காத்துக் கொள்ள வேண்டும், மற்றும் அது இலேசான அளவில் கூட மாற்றப்படவோ அல்லது மாறும்படியோ ஒருக்காலும் அனுமதித்து விடக் கூடாது.
>
> ஆனால் இந்த விரோதி பலம் வாய்ந்தவனாகவும், தீமோத்தேயு பலமற்றவராகவும் இருப்பதால், பவுல் மிகுந்த ஞானத்துடன், இந்தக் காத்துக் கொள்ளுதலானது "நமக்குள் வாசம்பண்ணுகிற பரிசுத்த ஆவியானவரின் மூலமாக" இன்றி வேறெவ்வகையிலும் செய்யப்பட முடியாது என்ற சிந்தனையைக் கூட்டுகின்றார், அதாவது அவர் (ஆவியானவர்) பவுல், தீமோத்தேயு மற்றும் விசுவாசிகள் யாவருக்குள்ளும் இருக்கின்றார் (ரோமர் 8:11).[38]

ஆவியானவரின் போதனைகளுக்கு, அதாவது வசனத்தின் போதனை களுக்கு இணங்குவதினால், நாம் - நமக்குள் வாசம்பண்ணுகிற ஆவியான வரின் மூலமாக - இந்த நற்பொருளைக் காத்துக் கொள்கிறோம். ஆவியான வர் (நமக்குள்) உள்ளாக வாசம்பண்ணுதலை மறுத்தல் என்பது சத்தியத் தைக் காக்கின்ற கிறிஸ்தவரின் வழிகளை உரித்துப் போடுதலாக உள்ளது. நமது கட்டளைக்கு நாம் உண்மையாய் இருக்கக் கூடியதான மற்றும் சத்தியமானது அதன் தூய்மை மற்றும் வல்லமையுடன் கொடுக்கப்படக் கூடியதாயிருக்கிற வழிமுறைகளை நாம் மறுக்க வேண்டும் என்றுதான் பிசாசானவன் விரும்புவான்! வானமும் பூமியும் ஒழிந்து போனாலும் தேவனுடைய வசனமானது பாதுகாக்கப்பட்டிருக்கும் (மத். 24:35).

*இருப்பினும், அவருடைய விலையேறப்பட்ட வசனங்கள் மண்பாண்டங்களில் வைக்கப்பட்டுள்ளன (2 கொரி. 4:2-6), மற்றும் நாம் பவுல் ஒப்புவித்த இந்தக் காவலைச் செய்யக் கடமைப்பட்டுள்ளோம்.*

## *பாடம் 4: உறுதிப்பாட்டை குறித்த ஒரு தேர்ந்து கொள்ளுதல் (1:15-18)*

*தீமோத்தேயுவுக்கு முன்பாக ஒரு தேர்ந்துகொள்ளுதல் இருப்பதாக அவர் பவுலினால் எச்சரிக்கப்பட்டார். கிறிஸ்தவம் என்பது ஒரு சம தரையான, நடுநிலைக்களனாய் இருப்பதில்லை, ஆனால் இது ஒரு சாய்தளமாக உள்ளது. ஒன்று நாம் காலத்தைப் பிரயோஜனப்படுத்திக் கொள்வதற்காக மேலே எழும்புவோம் அல்லது மதிப்பற்ற தன்மையில் பின்னோக்கி விழுவோம் (எபே. 5:15-17ஐக் காணவும்).*

### *உண்மையற்றவர்களாய் இருந்த பின்பற்றாளர்கள் (வ. 15)*

*வசனம் 15, இயேசு மத்தேயு 7:13, 14ல் உரைத்த விசாலமான வழியை விவரிப்பதாய் இருக்க வேண்டும். பவுல், "ஆசியா நாட்டிலிருக்கிற யாவரும், ... என்னைவிட்டு விலகினார்களென்று[39] அறிந்திருக்கிறாய்" என்று கூறினார். பிகெல்லு, எர்மொகெனே ஆகிய இருவர் இங்கு குறிப்பிடப் படுகின்றனர். புதிய ஏற்பாட்டில் இவர்களைப் பற்றிய குறிப்பு இந்த ஒரு இடத்தில் மட்டுமே காணப்படுகின்றது. அப்போஸ்தல உபதேசத்தைக் கை விட்டுச் செல்லுகின்றவர் என்பதே அவர்களின் வழி வழிப் பண்பாக உள்ளது. இவ்விதமாக அவர்கள் பயணத்தைத் தொடங்கியும் இடறி விழுந்தவர்கள் என்ற வகையில் யூதாஸ் காரியோத்துடன் வரிசையில் இருக்கின்றனர், மற்றவர்களும் தங்கள் வழியில் கீழிறங்கும்படி நம்பிக்கை யிழக்கச் செய்கின்றனர்!*

### *உண்மைத் தன்மையுடன் இருந்த பின்பற்றாளர் (வ. 16-18)*

*ஒநேசிப்போரு ஒருவர் மட்டுமே தேவனுடைய இரக்கத்திற்குப் பாத்திரராய் இருந்தார்.[40] ஒநேசிப்போரு பின்வருமாறு தம் நடக்கையில் விளங்கினபடியால் பவுல் இந்த முடிவை மேற்கொண்டார்:*

*முதலாவது அவர் பவுலை "அநேகந்தரம் இளைப்பாற்றினார்" (1:16). பவுலின் சூழ்நிலைகளில் அவர் நிச்சயமாகவே கிறிஸ்தவ ஐக்கியத்திற்காக ஏங்கியிருந்திருப்பார். ஒநேசிப்போருவால் அளிக்கப்பட்ட உற்சாகமூட்டுதலானது அவரது ஆவிக்குப் புத்துணர்வு தந்திருக்க வேண்டும்.*

*இரண்டாவது, அவர் பவுலின் விலங்கைக் குறித்து "வெட்கப்பட*

வில்லை" (1:8, 12ஐயும் காணவும்). பவுல் தீமோத்தேயுவிடம் வேண்டிக் கேட்டுக் கொண்டது என்ன என்பதை ஓநேசிப்போரு செயல் விளக்கப் படுத்தியிருந்தார்.

மூன்றாவது, அவர் பவுலை "அதிக ஜாக்கிரதையாய்த் தேடிக் கண்டு பிடித்தார்" (1:17). பலர் பவுலைக் கைவிடுவதற்குக் காரணமாய் இருந்த அதே சூழ்நிலைகளை ஓநேசிப்போரு நாடினார். அவர் பவுலுடன் இருக்க விரும்பினார். இது "துன்பத்தின் அன்புத் தோழமை" என்ற விஷயமாய் இருக்கவில்லை, ஆனால் ஒருவர் தம் துன்பத்தைப் பகிர்ந்து கொள்வதன் மூலமாக மற்றவருக்குப் புத்துணர்வூட்டும் விஷயமாய் இருந்தது!

நான்காவது, அவர் பவுலை "கண்டுபிடித்தார்." முந்திய கூற்றானது மாபெரும் விருப்பத்தைக் காண்பிக்கிறது என்றால், இது மாபெரும் விடாமுயற்சியைக் காண்பிக்கின்றது. அவர் பவுலைக் கண்டுபிடிக்கும் வரையிலும் முயற்சியை நிறுத்தாதவராய் இருந்தார்! இது, "காணாமற் போன ஆட்டைக் கண்டுபிடிக்குமளவும்" தேடுதலை நிறுத்தாத (லூக். 15:4) நல்ல மேய்ப்பனின் செயலைப் போன்றதாக உள்ளது.

ஐந்தாவது, அவர் அதை சீர்த்தன்மையுடன் செய்தார். ரோமாபுரி, எபேசு ஆகிய இரு இடங்களிலுமே ஓநேசிப்போரு பவுலுக்கு ஊழியத்தை[41] நிறைவேற்றினார் (1:18).

ஓநேசிப்போரு, தீமோத்தேயுவுக்கும் நமக்கும் உறுதியாய் நிலை நிற்குதலுக்கான மாபெரும் செயல்விளக்கமாக இருக்கின்றார். ஓநேசிப் போரு பிறருக்கு ஊழியம் செய்தபோது, அவர் வெறுங்கையராகப் போய் விடவில்லை.

*ஓநேசிப்போருவிடம் கண்டறியப்பட்ட இந்தப் பண்புகளில் உங்கள் நடக்கையைப் பண்புபடுத்துபவை எத்தனை?*

தீமோத்தேயு உபத்திரவத்திலும் கூட தனது விசுவாசத்தில் உறுதியாய் நிலைநிற்க வேண்டும் என்று பவுல் உற்சாகமூட்டினார். அவர் தீமோத்தேயுவை, உண்மைத் தன்மைக்குள்ள தடைகள் பற்றி எச்சரித்தார், ஆனால் சகித்துக் கொண்டிருக்கிறவர்களுக்கு வரும் ஆசீர்வாதங்களைப் பற்றியும் நினைவூட்டினார்.

---

குறிப்புகள்:

[1]புதிய ஏற்பாட்டில் அப்போஸ்தலர்களின் மூன்று வகைமுறை தொடர்பாக 1 தீமோ. 1:1ன் மீதான விளக்கங்களைக் காணவும். [2](தர்சு நகரத்து சவுல்; அப். 7:58-8:1; 9:1, 2; 26:9-11 என்ற வகையில்) பவுலின் கலகமானது கால்வீனிய தத்துவத்திற்கு (calvinism) எதிரான தரம் வாய்ந்த விவாதமாக உள்ளது. பவுலின் பிறப்பில் இருந்தே அவருக்காகத் தேவன் திட்டங்கள் கொண்டிருக்கையில், பவுலின் கலகமும் அவர் கிறிஸ்தவர்களைக் கொலை செய்ததும், அவர் தம் சொந்த சித்தம் கொண்டிருந்தது மற்றும் அதை தேவனுடைய மக்களுக்கும் தேவனுடைய திட்டத்திற்கும் எதிராகப் பயன்படுத்தியது ஆகியவற்றை நிச்சயமாகவே எதிரொலிக்கின்றன. துன்புறுத்துபவராய் இருந்த சவுலுக்கு, தேவன் மனந்திரும்பும் வாய்ப்பளித்து, பவுலாக ஆகி, "தேவனுடைய சித்தத்தினாலே" கிறிஸ்துவின்

*அப்போஸ்தலர் ஆவதற்கு அருளிரக்கம் காட்டினார் என்பது பற்றி நாம் எவ்வளவு நன்றியுள்ளவர்களாய் இருக்கக் கூடும்!* [3]*வில்லியம் ஹென்ரிக்ஸன் பின்வருமாறு கூறினார்: "பவுல் தமது நிருபத்தில் 'பிரியமுள்ள குமாரனாகிய தீமோத்தேயுவுக்கு' என்று குறிப்பிடுகின்றார். இ.வ. 2 தீமோ. 2:1; 3:14. ஒரு பிள்ளையானது தனது இயல்பான வாழ்வுக்கு பூமிக்குரிய தந்தையிடம் கடன்பட்டுள்ளது போல, தீமோத்தேயு தனது ஆவிக்குரிய வாழ்விற்காகப் பவுலுக்குக் கடன்பட்டு இருந்தார். மேலும், ஒரு குழந்தை/பிள்ளை தனது தந்தைக்கு ஊழியம் செய்வது போல தீமோத்தேயு சுவிசேஷத்தில் பவுலுடன் ஊழியம் செய்தார் ... மேலும், பிரியமுள்ள என்ற சொற்றொடரானது மரணத்தை எதிர்கொண்டுள்ள ஒருவரின் உதடுகளில் இயல்பானதாகவே உள்ளது, ... இது இவரது வாழ்வுடன் பல வழிகளில் பின்னிப்பிணைந்துள்ள வாழ்வைக் கொண்டுள்ள விலையேறப்பெற்ற இந்த இளம் உதவியாளர் மற்றும் நண்பருடனான கடந்த கால இணைவை மறுகண்ணோட்டம் இடுகின்றது"* (*A Commentary on 1 & 2 Timothy & Titus* [London: The Banner of Truth Trust, 1964], 224). [4]*ஜெபங்கள், வேண்டுதல்கள்* (Gk.: *deesis*) - "*... தேவை, ஏழ்மை ... நாடுதல், கேட்டல், ஒப்பந்தம் செய்து கொள்ளுதல், ... மனிதரால் தேவனிடத்தில் வேண்டுகோள்கள் உரைக்கப்படுதல் ... யாக். 5:16; 1 பேது. 3:12 ... அப். 1:14 ... 1 தீமோ. 2:1 ..." மாறுபட்ட கிரேக்க வார்த்தைகள் நமது வேண்டுதல்களின் இயல்பைக் குறிப்பிடுகின்றன: "... deesis என்பது தனிப்பட்ட தேவையின் வெளிப் பாட்டிற்கு முக்கியத்துவம் தருகின்றது, proseuche என்பது பக்தியின் கூறுக்கும், enteuxis என்பது குழந்தையைப் போன்ற நம்பிக்கைக்கும் முக்கியத்துவம் கொடுக்கின்றது, இவை யாவும் நம் இருதயம் தேவனுடன் உரையாடும் ஜெபத்தை குறிப்பிடுகின்றன*" (C. G. Wilke and Wilibald Grimm, *A Greek English Lexicon of the New Testament*, trans. and rev. Joseph H. Thayer [Edinburgh, Scotland: T. & T. Clark, 1901; reprint ed., Grand Rapids, Mich.: Baker Book House 1977], 126). [5]*நிரப்புதல்* (Gk.: *plerotho*) - "*நிரப்புவதற்கு ... ஏராளமாயிருக்கக் காரணமாகுதல், தாராளமாய் கொடுத்தல் அல்லது விநியோகித்தல் ... ஒருவரின் ஆத்துமாவின் மூலமாக சிதறச் செய்தல் ... ரோமர் 15:13 ... பூரணத்துவப்படுத்துதல், செய்து முடித்தல்*" (Thayer, 517-518). *இது ஒரு தரம் மட்டுமே வருகிற மற்றும் நிபந்தனை வினை வகையில் உள்ளது என்ற உண்மையானது, பவுல் தீமோத்தேயுவைச் சந்தித்த தருணம் (செயல்பாட்டின் வேளை) வரும் வரையிலும் இவ்வகையான மகிழ்ச்சியைப் பெற்றிருக்க மாட்டார் என்பதை மறைமுகமாய் உணர்த்துவதாய் இருக்கும்.* [6]Ronald A. Ward, *Commentary on 1 and 2 Timothy and Titus* (Waco, Tex.: Word Books, 1974), 143. [7]*மாயமற்ற விசுவாசம்* (Gk.: *anupokritos*) - "*மாய்மாலம் இன்றியிருத்தல் ... ரோமர் 12:9; 2 கொரி. 6:6; 1 தீமோ. 1:5; 2 தீமோ. 1:5; யாக். 3:17; 1 பேது. 1:22*" (Edward Robinson, *A Greek and English Lexicon of the New Testament* [New York: Harper & Brothers, 1850], 65). *விசுவாசத்தின் பிற தரங்கள் யோவா. 12:42, 43; யாக். 2:17; மத். 6:30; 8:10, 26; 15:28; 17:20; மாற். 11:22-24; அப். 6:5, 7; 11:24; ரோமர் 10:17; 12:3; எபி. 10:22 ஆகியவற்றில் குறிப்பிடப்பட்டுள்ளன.* [8]*ஆகையால் பவுலின் முதலாம் சுவிசேஷ ஊழியத்திற்குப் பின் வராத தேதியொன்றில் பாட்டியாகிய லோவிசாளும் (ஒருவேளை தனது மகளுடன் வசித்திருக்கலாம்) மற்றும் தாயாகிய ஐனிக்கேயாளும் மனம் மாற்றப் பட்டிருந்தனர், எனவே அவர்கள் வாக்குத்தத்தங்களின் நிறைவேற்றத்தைக் கிறிஸ்துவுக்குள் கண்டனர், மற்றும் தங்கள் நம்பிக்கையை அவருக்குள் வைத்தனர்; மற்றும் இவ்விரு பெண்களும் பதிலுக்கு பவுலுடன், தீமோத்தேயுவின் மனமாற்றத்தை விளைவித்த அந்த கிருபையின் மகிமையில் ஒத்துழைத்தார்கள்*" (Hendricksen, 228). [9]*நிச்சயம்* (Gk.: *peitho*) - "*நம்பிக்கை கொள்ளுதல் ... நம்பிக்கையாய் இருத்தல்*" (Thayer, 497). *இங்குள்ள நிறைவு வினையானது, அவர்களின் விசுவாசம்*

தீர்த்து வைக்கப்பட்ட ஒரு உண்மை அல்லது முடித்து வைக்கப்பட்டது என்பதைச் சுட்டிக்காண்பிக்கின்றது. இதற்கான ஆதாரமானது உள்ளாக உள்ளது மற்றும் பவுலின் செயப்பாட்டு விளைவு தைரியமான மெய்ப்பிக்கப்பட்ட நம்பிக்கையின் மீது வந்துள்ளது. [10]வல்லமை (Gk.: *dunamis*) - "... ஒரு பொருளின் இயல்பின் உண்மையினால் அதனுள் இருக்கின்ற வல்லமை ... மனித மனங்களின் மீது தெய்வீக வல்லமையின் செயல்பாட்டை ஆழ்ந்து சிந்திக்கையில் அந்த தெய்வீக வல்லமைக்கு *dunamis tou theou* என்பது பயன்படுத்தப்படுகின்றது, ... 2 தீமோ. 1:8; 1 பேது. 1:5, ..." (Thayer, 159).

[11]வில்லியம் பார்க்ளே என்பவர் "ஒழுங்கு" என்ற இச்சொற்றொடருக்குத் தொடர்புடையதை உற்று நோக்கியுள்ளார்: "*Sophronismos* என்பதே இவ்வார்த்தை யாக உள்ளது. இங்கு கிரேக்க மொழியிலிருந்து மொழிபெயர்க்கப்பட முடியாத மாபெரும் வார்த்தைகளில் ஒன்று உள்ளது. சிலர் இதை 'பரிசுத்தமான தன்மையின் தூய்மைத்துவம்' என்று விளக்கப்படுத்தியுள்ளனர். [Sir Robert] Falconer அவர்கள் இதை, 'பெரும் அச்சம் அல்லது துன்பத்தைச் சந்திக்கையில் கட்டுப்பாடு' என்பதாக விளக்குகின்றார். கிறிஸ்து ஒருவர் மட்டுமே ஒதுக்கப்படுதல் மற்றும் ஓடி விடுதல் ஆகிய நிலையில் ஒரே மாதிரியாகக் காத்திருக்கும்படியான அவ்விதமான சுய ஆதிக்கத் திறமையை, சுய கட்டுப்பாட்டை, சுய ஒழுங்கை நமக்குத் தர முடியும் ... *Sophronismos* என்பது ஒரு மனிதர் முதலில் கிறிஸ்துவின் ஊழியக்காரராகவும் மற்றும் தன்னையே ஆள்பவராகவும்/தனக்குத் தானே எஜமானராகவும் இருக்கின்றபடி யால் பிறரை ஆளும் ஒரு மாபெரும் அதிகாரியாக்குகின்ற சுய - ஆதிக்க நிலையாக (தேவனால் தரப்பட்ட நிலையாக) உள்ளது" (*The Letters to Timothy, Titus & Philemon,* The Daily Study Bible Series, rev. ed. [Philadelphia: Westminster Press, 1960], 166). [12]Hendricksen, 230. [13]வெட்கப்படுதல் (Gk.: *epaischunthe*) - தீமோத்தேயுவின் "வெட்கப்படாதிருக்கும்" நிலையானது தீர்த்து வைக்கப்பட்ட ஒரு உண்மையாய் இருப்பதில்லை என்பதை நிபந்தனை நிலை வினையானது அறிவிக்கிறது. இயேசு சிலுவையை நெருங்கிய பொழுது, எல்லா அப்போஸ்தலர்களும் வெட்கம் அடைந்தனர். செயப்பாட்டு வினையானது ஆர்வத்திற்குரியதாக உள்ளது, ஏனெனில் தீமோத்தேயுவின் வெட்கம் தவிர்க்கும் நிலையானது புறம்பேயுள்ள ஒரு ஆதார மூலத்திலிருந்து வர வேண்டும் என்று பவுல் எச்சரிக்கை செய்தார் (வ. 7ஐக் காணவும்). அவர் தாம் வெட்கப்படாதிருக்கும்படி தம்மைப் பெலப்படுத்துவதற்கு தெய்வீக செல்வாக்குகளை அனுமதிக்க வேண்டும் (2:1; 4:17, 18ஐக் காணவும்). [14]Walter Bauer, *A Greek-English Lexicon of the New Testament and Other Early Christian Literature,* 2d ed., rev. William F. Arndt and F. Wilbur Gingrich (Chicago: University of Chicago Press, 1957), 281. [15]பாடநுபவித்தல் (Gk.: *sugkakopatheson*) - கண்டிப்பு வினைச் சொல்லானது வேண்டுகோள் மற்றும் கட்டளை ஆகியவற்றின் கலவையாக உள்ளது. மிக அதிகமான முரண்பாடு நிலவிய, மிக அதிகமான சகோதரர்கள் அலை பாய்ந்து கொண்டிருந்த இந்த சிக்கலான வேளையில், பவுல் தீமோத்தேயுவுக்காக இந்தக் கண்டிப்பு வினைச் சொல்லில் கதறிக் கொண்டிருந்தார் - அவர் துன்பங்களைப்பட்டு அநுபவிக்க வேண்டும். மூல வார்த்தையானது, "... எவரொருவரினாலும் தீமையை அனுபவித்தல், துன்பத்தைச் சகித்துக் கொள்ளுதல் ... 2 தீமோ. 1:8 ... சுவிசேஷத் திற்காகப் பிறரினால் வரும் துன்பத்தை அனுபவித்தல்" என்று அர்த்தப்படுகிறது (Robinson, 682). [16]Ward, 149. [17]Alfred Marshall, *The R.S.V. Interlinear Greek-English New Testament* (Grand Rapids, Mich.: Zondervan Publishing House, 1970), 835. [18]பரிசுத்த (Gk.: *hagios*) - "தேவனுக்கு அர்ப்பணிக்கப்பட்டதாக, பரிசுத்தமானதாக, புனிதமான தாக, ... தேவனுக்கும் அவருடைய ஊழியத்திற்கும் முன் குறிக்கப்பட்டதாக/ஒதுக்கி வைக்கப்பட்டதாக இருத்தல் ... மத். 4:5; 27:53; வெளி. 11:2 ... கிறிஸ்தவர்கள்

*'பரிசுத்தர்கள்' என்று அழைக்கப்படுவதால் ... அவர்களின் klesis [அழைப்பு]ம் கூட hagios ஆகவே உள்ளது, ..."* (Arndt and Gingrich, 9). *மத். 5:48ஐக் காணவும்.* [19]*2 மகாபேயர் 3:24-30; 15:22-27. கி.மு. சுமார் 100 ஆம் ஆண்டில் எழுதப்பட்ட தள்ளுபடி ஆகமப் புத்தகங்களில் இரண்டு புத்தகங்களான மகாபேயர் ஆகமங்கள் பழைய மற்றும் புதிய ஏற்பாடுகளுக்கிடையில் இருந்த கால கட்டத்தில் நடைபெற்ற வரலாற்று நிகழ்ச்சிகளைக் கொண்டுள்ளது. இவ்விரு புத்தகங்களுமே கி.மு. 400-166 காலத்தில் பலஸ்தீனத்தில் யூதர்களை அடக்கி வைக்க முயற்சி செய்தமை மற்றும் சுதந்தரத்திற்கு யூதர்களின் போராட்டம் ஆகியவற்றின் மீது கவனம் செலுத்துகின்றன.* [20]Barclay, 172-73.

[21]*ஜீவன்* (Gk.: *zoe*) - *"... உயிருடனிருத்தல் ... உயிர் வாழும் வகை ... சுவிசேஷக் கருத்தில், நித்திய ஜீவன், இரட்சிப்பு ... தேவனுடைய இராஜ்யத்தில் பேரின்பமும் மகிமையும் ... மத். 19:16, 17; யோவா. 3:15, 16; 5:24 ... 2 தீமோ. 1:1 ..."* (Robinson, 319-20). [22]*அழியாமை* (Gk.: *aphtharsia*) - *"அழிவற்ற தன்மை, அழிவில் இருந்து விலக்கப்பட்ட தன்மை; உயிர்த்தெழுதலுக்குப் பின்பு பரிசுத்தவான்களின் உடல்களின் நிலை ... 1 கொரி. 15:42, 50, 53-54 ... பரலோகத்தில் பரிசுத்தவான்களின் எதிர்கால வாழ்வும் பேரின்பமும், ரோமர் 2:7; 2 தீமோ. 1:10"* (Robinson, 111). [23]Hendriksen, 234. [24]*நியமிக்கப்படுதல்* (Gk.: *etethe*) - *செயப்பாட்டு வினையானது பவுல் ஆதாயப்படுத்தியிருந்த (ஊழியப்பகுதியின்) நபர்த்துவமானது அவருக்கு அவருடைய சொந்த விருப்பச் செயலாற்றினால் இன்றி வேறொரு ஆதார மூலத்திலிருந்து வந்தது என்பதற்கு இன்னொரு தெளிவான எடுத்துரைப்பாக உள்ளது (1 தீமோ. 1:12க்கான குறிப்புகளைக் காணவும்). Tithemi என்ற மூல வார்த்தையானது "... ஒருவரை அல்லது ஏதோ ஒன்றை இடுதல், வைத்தல், ... அமைத்தல் ... நிலைநாட்டுதல் ... 1 தீமோ. 2:7; 2 தீமோ. 1:11 ..." என்று அர்த்தப்படுகின்றது* (Arndt and Gingrich, 823-24). [25]*பிரசங்கியார்* (Gk.: *kerux*) - *"அறிவிப்பவர், வெளிப்படையான அறிவித்தல்களை ஏற்படுத்தும் கடமை கொண்டவர் ... அறிவிக்கின்ற ஒருவர்"* (Arndt and Gingrich, 432); *"... ஒரு பிரசங்கியார், வெளிப்படையாக அறிவுறுத்துபவர், நோவாவைப் போல தெய்வீக சித்தம் மற்றும் நோக்கங்களின் எடுத்துக்காட்டு, 2 பேது. 2:5; ... பவுலைப் போன்றவர், 1 தீமோ. 2:7; 2 தீமோ. 1:11"* (Robinson, 398); *"... வெளிப்படையான அதிகாரத்துடன் நியமிக்கப்பட்ட ஒரு செய்தியாளர், இவர் அரசர்கள், நீதிபதிகள், பிரபுக்கள், சேனைத் தலைவர்கள் அல்லது பொது அறிவிப்பு அல்லது வேண்டுகோளைக் கொடுப்பவர்களின் அலுவலக செய்திகளை எடுத்துரைப்பவர் ... தேவனுடைய தூதுவர், மற்றும் தெய்வீக வார்த்தையைப் பறைசாற்றுபவர் அல்லது அறிவிப்பவர்"* (Thayer, 346). [26]Barclay, 170. [27]*அப்போஸ்தலர்* (Gk.: *apostolos*) - ஒரு *"பிரதிநிதி, தூதர், கட்டளைகளுடன் அனுப்பப்பட்டவர்"* (Thayer, 68). [28]Barclay, 171. [29]*போதகர்* (Gk.: *didaskalos*) - *"... தேவனுடைய விஷயங்கள் மற்றும் மனிதரின் கடமைகளைப் பற்றிப் போதிப்பவர்"* (Thayer, 144). [30]Barclay, 171.

[31]*காரணம்* (Gk.: *aitia*) - *"காரணம் ... விஷயம்." இதன் ஒரு பொருட் சொல்லான* elegchos *என்பது "ஒழுக்கம் சார்ந்த அல்லது நீதி சார்ந்த, நிரூபிக்கப்பட்ட கட்டளை என்று அர்த்தப்படுகின்றது"* (G. Abbott-Smith, *A Manual Greek Lexicon of the New Testament* [Edinburgh, Scotland: T. & T. Clark, 1948], 14). [32]*அறிதல்* (Gk.: *oida அல்லது eido*) *"தனிப்பட்ட பழக்கம் மற்றும் உறவுபடும் நிலை கொண்டிருத்தல் ..."* (Robinson, 209-10). [33]*விசுவாசித்தல்* (Gk.: *pepisteuka*) - *இந்த முற்று வினையானது, இது பவுலின் சிந்தையில் உள்ள நிறைவுற்ற உற்பத்திப் பொருள் அல்லது உண்மை என்று அறிவிக்கின்றது, மற்றும் சுட்டு வினையானது இது தற்கால நடப்பில் அல்லது தொடர்ந்து உள்ள விசுவாசம் என்பதை அறிவிக்கின்றது. இதன் மூல வார்த்தையான* pisteuo *என்பதற்கு தாயெர் அவர்கள் பின்வரும் விளக்கம் தருகின்றார்: "... இணங்கச்*

*செய்யப்படுதல்; மதிப்பு வைத்தல், நம்பிக்கை வைத்தல் ... ஏதேனும் ஒன்றைச் செய்தலுக்கு வல்லமை அல்லது உதவி பெற இயேசுவில் அல்லது தேவனில் நம்பிக்கை வைத்தல்: மத். 8:13; 21:22 ... ஒரு மனிதர் இயேசுவை அணைத்துக் கொள்ளும் விசுவாசத்திற்கு விசேஷமாகப் பயன்படுத்தப்படுகின்றது; அதாவது இயேசுவே மேசியா என்ற உறுதிப்பாடு, மகிழ்வு நிறைந்த நம்பிக்கை - அவரே தேவனுடைய ராஜ்யத்தில் நித்திய இரட்சிப்புக்கென்று நியமிக்கப்பட்ட உரிமையாளர், கிறிஸ்துவிற்கு கீழ்ப்படிதலுடன் இணைந்தது ... அப். 8:37 ... 1 தீமோ. 3:16 ... 1:16; 1 பேது. 2:6 ... கிறிஸ்துவில் [தேவனில்] நம்பிக்கை வைத்தல், 2 தீமோ. 1:12"* (Thayer, 511-512). [34]Ward, 155-56. [35]*கிரேக்க வார்த்தையானது (hupotuposin eche hugiainonton logon)* இன்னும் மிகுந்த அறைகூவல் விடுப்பதாக உள்ளது. இது நேர்ப் பொருளில், *''நீ ஆரோக்கியமான வசனங்களின் மாதிரியை உடையவனாயிரு''* என்று வாசிக்கப்படுகிறது (Hendriksen, 237). *Eche* என்பது நிகழ்கால, கட்டளை, முன்னிலை ஒருமைச் சொல்லாக உள்ளது. [36]நற்பொருள் (Gk.: *ten kalen paratheken; வ. 12ஐக் காணவும், இங்கு இது சந்தேகமின்றி சுவிசேஷத்தையே குறிக்கின்றது) - Paratheke* என்றால் *"... ஒரு இடுபொருள், ஒரு நம்பிக்கை ... ஒருவரின் விசுவாசம் நிறைந்த காத்தலுக்கு ஒப்புவிக்கப்பட்டது ... சுவிசேஷத்தின் சரியான அறிவு மற்றும் தூய உபதேசம் ஆகியவை பயன்படுத்தப்படுதல், உறுதியாகவும் விசுவாசத்துடனும் வைக்கப்படுதல், மற்றும் பிறருக்கு உணர்வுடன் அறிவிக்கப்படுதல்/ஒப்படைக்கப் படுதல்: 2 தீமோ. 1:12 ... 1 தீமோ. 6:20 மற்றும் 2 தீமோ. 1:14"* (Thayer, 482). [37]*காத்தல்* (Gk.: *phulasso*) - இது தெரிவு செய்து கொள்ளுதலாய் இருப்பதில்லை. இந்த வசனத்தின் தேவைகளைச் செயல்படுத்த தீமோத்தேயு தயாராக இருக்க வேண்டும். [38]Hendriksen, 237. [39]*புறம்பே விலகுதல்* (Gk.: *apestraphesan*) - *"எவரொருவருடனும் உள்ள தொடர்பிலிருந்து புறம்பே விலகுதல், விலகிச் செல்லும்படி சோதிக்கப்படுதல் ... பின்வாங்கி மாற்றம் அடைதல், திரும்புதல் ... தீத்து 1:14''* (Thayer, 68). செயப்பாட்டு வினையானது அவர்கள் சில வெளிப்புறச் சக்திக்கு சரண் அடைந்து *"புறம்பே திரும்பினார்கள்"* என்பதைச் சுட்டிக்காண்பிக்கின்றது. [40]இரக்கம் (Gk.: *eleos*) - *"... பரிதபிக்கத்தக்க மற்றும் துன்புறும் மக்களிடம் காண்பிக்கப்படும் இரக்கத்தன்மை அல்லது நல்ல சிந்தை, இத்துடன் அவர்களை அதிலிருந்து விடுவிக்கும்படியான விருப்பமும் இணைந்துள்ளது ... கிறிஸ்துவின் மூலம் மனிதருக்கு இரட்சிப்பை அருளவும் அளிக்கவும் தேவனுடைய இரக்கமும் கருணையும்: லூக். 1:54; ரோமர் 15:9; எபே. 2:4 ... 2 தீமோ. 1:16, 18"* (Thayer, 203).

[41]*ஊழியத்தை நிறைவேற்றுதல்* (Gk.: *diakoneo*) - *''காத்திருத்தல் அல்லது உதவியாளராய் இருத்தல் ... ஊழியம் செய்தல் ... எவரொருவரின் விருப்பங்கள்/ தேவைகளை எ.கா. உணவு, உடை ஆகியவற்றை அளித்தல்; ... ஏதொன்றுக்கும் அல்லது எவரொவருக்கும் ஊழியம் செய்தல் ... அளித்தல் ... விநியோகித்தல் ... தெய்வீக செய்தியை எடுத்துரைத்தல் ..."* (Robinson, 170-71).